328



# அசோக வாசகம்

27 JUL 1957

முதற் படிவம்

சிறப்புப் பகுதி

TB
031(6)
N52
86506.

# அசோக வாசகம்

## முதற்புத்தகம்—முதற்படிவம்

## இரண்டாம் பாகம்—சிறப்புப் பகுதி

சென்னை, எம். சிடி. முத்தையாச் செட்டியார் ஹைஸ்கூல்
உதவி ஆசிரியர்
வித்துவான், எஸ். முத்து ஐயங்கார்,
பி. ஏ. (ஹானர்ஸ்), எல். டி.
எழுதியது

வி. சு. சுவாமிநாதன்
பிரசுரகர்த்தர்
மதுரை :: மதராஸ்

பதிப்புரிமை] [அணா 10 — ந. பை. 62

முதற் பதிப்பு—அக்டோபர் 1952
நான்காம் பதிப்பு—1957

TB
031(6)
N52

90598

பாரதி பிரஸ், மதுரை:—'57.

# முகவுரை

அண்மையில் கல்வி இலாகாவினரால் வெளியிடப் பெற்றுள்ள தமிழ்ப் பாடத்திட்டத்திற்கு இணங்க அசோக வாசக வரிசைகள் ஆக்கப்பட்டுள்ளன. மொழிப் பாடங்களில் முதல் பிரிவு தமிழாக உள்ள மாணவர்களுக் காகப் பொதுப் பகுதியும், இரண்டாம் பிரிவும் தமிழாக உள்ள மாணவர்களுக்காகச் சிறப்புப் பகுதியும் எழுதப் பெற்றுள்ளன.

பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட பொருள்களில் பெரும்பான்மையானவை இவ்வாசகங்களில் இடம் பெற் றுள்ளன. விஞ்ஞானம், சரித்திரம், இலக்கியம் முதலிய பல்வேறு அறிவுத்துறைகளிலிருந்து பாடங்கள் அமைக் கப்பட்டுள்ளன. அந்த அந்த வகுப்பின் தகுதிக்குத் தக்கபடி பொருள்களும் மொழிநடையும் அமைவதில் கவனம் செலுத்தப் பெற்றுள்ளது. தமிழ் இலக்கியங்களி லிருந்தும் பல பாடங்கள் தேர்ந்து கொள்ளப்பட்டுள் ளன. பஞ்ச தந்திரம், அரேபிய இரவுக் கதைகள், டால்ஸ்டாய் கதைகள் முதலிய நூல்களிலிருந்தும் சில கதைகள் எடுத்தாளப் பெற்றுள்ளன.

பாடங்களைப் பற்றிய வினாக்களுடன் மொழிப் பயிற் சிக்கான கேள்விகளும் தரப்பட்டுள்ளன. இந்த வாசக வரிசைகள் மாணவருக்கும் ஆசிரியர்களுக்கும் முறையே கற்கவும் கற்பிக்கவும் இன்பந்தருவன வாயிருக்கும் என்று நம்பப்படுகிறது.

சென்னை
17-10-'52

ஆக்கியோன்

# பொருளடக்கம்

## உரைநடை


| வரிசை | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | அதியமானும் ஔவையாரும் | .... | 7 |
| 2. | நட்புப் பேறு | .... | 14 |
| 3. | யானைகளைப் பழக்குதல் | .... | 21 |
| 4. | வீரமா முனிவர் | .... | 27 |
| 5. | ஹென்றி போர்டு | .... | 34 |
| 6. | ராஜா ரவி வர்மா | .... | 40 |
| 7. | நீர்வீழ்ச்சிகள் | .... | 45 |
| 8. | சிறுமியர் விளைத்த பெருங்கலகம் | .... | 51 |


## செய்யுள்


| | | | |
|---|---|---|---|
| I | வாழ்த்து | .... | 57 |
| II | கதை | .... | 57 |
| III | நீதி | | |
| | 1. இனியவை நாற்பது | .... | 59 |
| | 2. இன்னா நாற்பது | .... | 59 |
| | 3. சதகச் செய்யுள் | .... | 59 |
| IV | பிறவகை | .... | 62 |

# அசோக வாசகம்

## முதற் புத்தகம்—சிறப்புப் பகுதி

### 1. அதியமானும் ஔவையாரும்

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் மதுரை மாநகரில் பெரும் புலவர்கள் கூடித் தமிழாராய்ந்த சங்கமொன்றிருந்தது. அதற்கு முன் இரண்டு சங்கங்கள் தோன்றி மறைந்தமையால், அது கடைச் சங்கம் எனப் பெயர் பெற்றது. அக்காலத்தில் இயற்றப்பட்ட பல நூல்கள் இன்றுவரை அழியாதிருந்து சங்க நூல்கள் எனப் புலவர்களால் பாராட்டப்படுகின்றன. அந் நூல்கள் தோன்றிய காலமே சங்க காலமாகும்.

சங்க காலத்தில் தமிழ் நாடு மூன்று ராஜ்யங்களாகப் பிரிந்து சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. இம்மூவரும் முடியுடை மன்னர் என்று சொல்லப்படுவர். இவர்களுக்கு அடங்கி, சிறு பிரதேசங்களைப் பரிபாலித்து வந்த சிற்றரசர்களும் ஆங்காங்கிருந்தனர். இவர்களைக் குறுநில மன்னர் என்று கூறுவதுண்டு. முடியுடை மன்னர், குறுநில மன்னர் ஆகிய எல்லோருமே பொதுவாகத் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார்கள். எனினும் அதியமான், ஆய், பாரி, காரி, ஓரி, நள்ளி, பேகன் என்ற ஏழு குறுநில மன்னர்களும், புலவர்களுக்கும் பிறருக்கும் வரையாது

கொடை வழங்கியமையால், அவர்கள் கடையெழு வள்ளல்கள் என்று சிறப்பிக்கப் படுகின்றனர். இவர் களில் அதியமானது வரலாற்றைச் சிறிது படிப் போம்.

தற்கால சேலம் ஜில்லாவில் தருமபுரி என்ற சிற்றூர் ஒன்றுளது. அதன் பண்டைப் பெயர் தகடூர். அதைத் தலைநகராகக் கொண்ட ஒரு சிறு ராஜ்யத் திற்கே அதியமான் சிற்றரசனாக விளங்கினான். அதியன், அஞ்சி, எழினி என்ற வேறு பெயர்களும் அவனுக்கு உண்டு. அவன் தன்னைக் காணவந்த தமிழ்ப் புலவர்களுக்கெல்லாம் தக்கவாறு பரிசில் கொடுக்கும் இயல்புள்ளவனாயிருந்தான். அக்காலப் புலவர்கள் பலர் அவனிடம் சென்று பெருஞ் செல்வம் பெற்று அவனைப் புகழ்ந்து பாடிய செய்யுட்கள் புறநா னூறு என்ற சங்க நூலில் இடம் பெற்றுள்ளன.

சங்க காலத்தில் ஔவையார் என்ற பெண்புல வர் இருந்தார். அவருடைய புலமையை அக்கால மன்னர்களும் புலவர்களும் கௌரவித்துப் போற்றி வந்தார்கள். ஒரு சமயம் ஔவையார் அதியமானைக் காண்பதற்குத் தகடூர் சென்றார். அவரைப்பெரு மகிழ்வுடன் வரவேற்று உபசரித்த அதியன், சில நாட்கள் தகடூரில் தங்கியிருக்குமாறு தமிழ் மூதாட் டியை வேண்டிக் கொண்டான். அவனுடைய அன்புக் குக் கட்டுப்பட்ட ஔவையாரும் அவ்வாறே செய்ய இசைந்தார். அதியன் ஔவையாருடன் அளவளாவி மகிழ்ந்து நாட்களைக் கழித்தான். ஆனால் அவருக்குப் பரிசில் கொடுக்கவில்லை.

ஓர் ஊரிலேயே பல நாட்கள் தங்கும் வழக்கம் ஔவையாரிடம் இல்லை. தமிழ் நாடெங்கும் சுற்றிக் கொண்டிருப்பதே அவருக்குப் பிடித்த வாழ்க்கையா யிருந்தது. நாட்கள் பல சென்றும் அதியமான்



ஔவையார்

பரிசில் கொடுத்துத் தம்மை வழியனுப்பாததைக் கண்ட ஔவையார் மனம் வெறுத்து, அதியனிடம் கூறிக் கொள்ளாமல் புறப்பட ஆயத்தம் செய்தார்; வாயிற் காவலனைக் கண்டு, 'நான் சென்று வருகி றேன். என் போன்ற புலவர்களின் தகுதியை உன் அரசன் நன்கு அறியவில்லை. என்னை ஆதரிப்பதற்கு

இவனைத் தவிர வேறு பல மன்னர்கள் இருக்கின்றனர்,' என்ற கருத்துள்ள ஒரு செய்யுளைச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார். வாயிற்காவலன் இந் நிகழ்ச்சியை உடனே அதியனிடம் கூறினன். திடுக்குற்ற அவ்வள்ளல் ஓடிச்சென்று ஔவையாரைத் திரும்ப அழைத்து வந்து, தான் உடனே பரிசில் தராமலிருந்ததற்குக் காரணம் கூறினன். "ஔவைப் பிராட்டி! நான் பரிசில் தந்திருந்தால், தாங்கள் உடனே புறப்பட்டு விடுவீர்கள். தங்களுடன் அளவளாவி மகிழும் இன்பம் எனக்கு இல்லாது போய் விடும். அதற்கு அஞ்சியே நான் காலந் தாழ்த்தி வந்தேன். என் பிழை பொறுப்பதுடன் இன்னும் சில நாட்கள் இங்கு தங்கிச் செல்லவேண்டும்," என்று அன்பு ததும்ப, அதியன் வேண்டிக்கொண்டான். ஔவையார் அவனுடைய உள்ளன்பை வியந்து மேலும் சில நாட்கள் அங்கிருக்கச் சம்மதித்தார்.

தகடூருக்கு அருகே குதிரைமலை என்று பெயர் கொண்ட மலையொன்று இருந்தது. அதில் செங்குத்தான பிளவொன்று இருந்தது. அங்கு மனிதர் எளிதில் செல்லமுடியாத இடத்தில் நெல்லி மரமொன்று இருந்தது. அம்மரத்தில் உண்டான கனியைப் புசித்தவர் நெடுங்காலம் உலகில் வாழ்வார் என்று ஓர் அறிஞர் அதியமானிடம் கூறியிருந்தார். ஒருநாள் அதியன் காட்டில் வேட்டையாடிவிட்டுக் குதிரைமலைச் சாரலில் வரும் பொழுது அப்பிளவிலிருந்த நெல்லி மரத்தைக் கண்டான். மரக் கிளைகளை உற்று நோக்கிய பொழுது ஒரே ஒரு கனி அதில் தொங்கியது தெரிந்தது. மிக்க சிரமத்துடன் செங்குத்துப் பாறைகளில்

தொத்திச் சென்று மரத்தில் ஏறி, நெல்லிக் கனியைப் பறித்துக் கொண்டு மீண்டு வந்தான்.

நெடிய ஆயுளை அளிக்கவல்ல அக்கனியை, தானே புசிக்க அதியன் விரும்பவில்லை. தனது அரண்மனையை அடைந்ததும் ஔவையாரைத் தேடிச் சென்றான். அவரிடம் அக்கனியைக் கொடுத்துப் புசிக்குமாறு வேண்டிக்கொண்டான். ஔவையார் அதன்மகிமையை அறிந்து கொள்ளாமல் அது ஒரு சாதாரண நெல்லிக்கனி என்று கருதி, சாப்பிட்டு விட்டார். பிறகுதான் அக்கனியின் இயல்பை அதியமான் அவருக்கு எடுத்துரைத்தான். இதைச் செவியுற்ற ஔவையார், அதியனை நோக்கி, "இந்தக் கனியை நீயே புசித்திருக்கலாமே! நீ நெடுங்காலம் வாழ்ந்திருந்தால் புலவர்களுக்கெல்லாம் ஊன்றுகோலாயிருப்பாயே! உன் குடி மக்களுக்கும் பல்லாண்டுக் காலம் நன்மை செய்திருக்கலாமே! மூப்படைந்த நான் இன்னும் சில ஆண்டுகள் வாழ்ந்திருப்பதால் என்ன பயன் விளையப் போகிறது?" என்று கூறினர்.

அதியன் பணிவுடன் ஔவையாரை நோக்கி, "புலமை நிரம்பிய மூதாட்டி! தாங்கள் கூறியதை யான் ஒப்புக்கொள்ளேன். நான் நெடுங்காலம் வாழ்வதால் என் சிறு நாட்டிலுள்ள குடிகள் மட்டும் பயனடையக் கூடும். ஆனல் தாங்கள் பல்லாண்டு வாழ்வீரேல், தமிழ் நாடு முற்றிலும் பயனடையும். தாங்கள் இயற்றும் கவிதைகளால் தமிழ் இலக்கியம் வளமுறும். இக்கருத்துடன் தான் நெல்லிக் கனியைத் தங்களுக்குத் கொடுத்தேன்," என்று பதிலளித்தான்.

தமிழ்ப் புலவர்களின்மீது அதியமானுக்கு ஏற்பட்டிருந்த அன்பினையும், அவனது தன்னலங் கருதாத் தன்மையையும், கொடைத் திறத்தையும் கண்ட ஔவையார் மிக்க வியப்புற்று அவனை வாழ்த்தி ஒரு செய்யுள் பாடினார். அவனது அவையிலேயே நெடுங் காலம் தங்கியிருந்து அவனை மகிழ்வித்தார்.

## பயிற்சி

I பொருள் கூறு:—

பாராட்டப்படுகின்றன, முடியுடை மன்னர், குறுநில மன்னர், வரையாது, வள்ளல், புலமை, கௌரவித்து, மூதாட்டி, பரிசில், அளவளாவி, ஆயத்தம், காலம் தாழ்த்தி, புசிக்க, ஊன்றுகோல், வளமுறும்.

II உன் சொந்த வாக்கியங்களில் கீழ்வரும் சொற்களை அமைத்து எழுது:—

வரையாது, கௌரவி, காலம் தாழ்த்து, அளவளாவு, வளமுறும்.

III விடை கூறு:—

1. சங்ககாலம் என்பது எக்காலத்தைக் குறிக்கும்?
2. சங்க காலத்தில் தமிழ் நாட்டை ஆண்ட மன்னர்கள் யாவர்?
3. கடையெழு வள்ளல்கள் யாவர்?
4. அதியமான் ஆட்சி செய்த நாடு எது?
5. அதியமானுக்கு வழங்கிய வேறு பெயர்கள் யாவை?
6. ஔவையாருக்கு அதியமான் ஏன் உடனே பரிசில் தரவில்லை?
7. ஔவையார் அதியமானிடம் வெறுப்புற்று வாயிற் காவலனிடம் என்ன கூறினார்?
8. நெடிய ஆயுளைத் தரவல்ல நெல்லிக் கனியைப்பறித்து வந்த அதியமான் அதனை ஔவையாருக்கு ஏன் கொடுத்தான்?

9. நெல்லிக் கனியின் மகிமையை அதியமான் ஔவை யாரிடம் முதலில் ஏன் சொல்ல வில்லை?

10. ஔவையார் நெடுங்காலம் வாழ்ந்திருந்தால் என்ன பயன் விளையும் என்று அதியமான் கூறினான்?

IV இலக்கணம்:—

1 வரி எழுத்து, ஒலி எழுத்து—இவற்றின் வேறுபாடு என்ன?

2. உயிர் எழுத்து, மெய் எழுத்து, ஆய்த எழுத்து, உயிர் மெய் எழுத்து—இவை தனித்தனி எத்தனை?

3. பின் வரும் வாக்கியத்தில் உள்ள உயிர் எழுத்து, மெய் யெழுத்து, உயிர் மெய்யெழுத்து ஆகியவற்றைத் தனித் தனியே எழுது:

ஓர் ஊரிலேயே பல நாட்கள் தங்கும் வழக்கம் ஔவை யாரிடம் இல்லை.

## 2. நட்புப் பேறு

முன்ஞெரு காலத்தில் கோதாவரி நதிக்கரையில் ஒரு வன்னிமரம் இருந்தது. இலகுபதனன் என்ற ஒரு காகம் அம் மரத்தைத் தன் வாசஸ்தானமாகக் கொண்டிருந்தது. ஒரு நாள் காலையில் பயங்கரமான தோற்றத்தையுடைய வேடன் ஒருவன் அந்த மரத்தின்கீழ் வந்தான். அவனைக்கண்ட காகம் பயந்து, அவன் செய்வதைக் கவனித்துக் கொண்டிருந்தது. வேடன் அவ்விடத்தில் ஒரு வலையைப் பரப்பி, அதன் மேல் இரண்டு மூன்று பிடி தானியங்களைத் தூவிவிட்டு சற்றுத் தொலைவிலிருந்த ஒரு புதரில் ஒளிந்துகொண்டான். சிறிது நேரத்தில் கூட்டமாக அங்குவந்த புருக்கள் மரத்தின்மேல் அமர்ந்தன. கீழே தூவப்பட்டிருந்த தானியங்களைக் கண்ட புருக்கள் அவற்றைப் புசிக்க விருப்பங் கொண்டன. அவற்றின் அரசஞயிருந்த சித்திரக்கிரீவன் என்ற புரு, "மனித சஞ்சாரமற்ற இந்த அடவியில் தானியங்கள் இப்படிச் சிதறுண்டு கிடக்குமா? இதில் ஏதோ சூது இருக்கிறது. இந்தத் தானியங்களைப் புசிக்கவேண்டாம்" என்றது.

சித்திரக்கிரீவனது பேச்சைக்கேட்ட புருக்களில் ஒன்று, "எதைப் பார்த்தாலும் சந்தேகப்படுகிறவன் ஒருபோதும் மகிழ்ச்சியுறப் போவதில்லை. நமக்குக் கிடைக்கும் உணவுக்கெல்லாம் தோஷம் கற்பித்துக் கொண்டிருந்தால், நாம் பட்டினி கிடக்க வேண்டியதே" என்றது.

பசியால் வாடிய மற்றப் புருக்கள் முன்யோசனை அற்ற இப்புருவின் பேச்சை ஆமோதித்தன. எல்

லாம் கூட்டமாக எழுந்து தரையில் அமர்ந்து தானியங்களைக் கொத்தத் தொடக்கிய பொழுது அவற்றின் கால்கள் மெல்லிய வலையில் சிக்கிக்கொண்டன. மரத்தின்மீதிருந்த புருவரசு, "என் பேச்சைக்கேளாமல் என் பரிவாரங்கள் எல்லாம் வலையில் அகப்



வேடனும் புருவும்

பட்டுக்கொண்டன. நான் மட்டும் தனித்திருப்பதால் என்ன பயன்?" என்று சிந்தித்து, கீழே வந்து அதுவும் வலையில் சிக்கிக்கொண்டது.

புதரில் ஒளிந்திருந்த வேடன் இதையெல்லாம் கண்டு, புருக்களைப் பிடிக்கக் கருதி வெளிப்பட்டான். அவனைக் கண்ட புருக்கள் நடுநடுங்கி, சித்திரக் கிரீவனைப் பார்த்து, "புத்தியற்ற புருவின் சொல்

லுக்குச் செவிசாய்த்து நாம் இந்த இக்கட்டில் அகப் பட்டோம். உன் சொல்லைக் கேளாத எங்களுக்குப் பலன் கைமேல் கிடைத்துவிட்டது" என்றன.

சித்திரக்கிரீவன், "நடந்ததைக் குறித்து வருந்து வதில் பயனில்லை. நாம் தப்புவதற்கு ஒரே வழிதானி ருக்கிறது. நாமெல்லோரும் ஒருசேரப் பறந்து வலை யையும் தூக்கிச் செல்லவேண்டும்," என்றது. அக் கணமே புருக்களெல்லாம் ஒற்றுமையாய்ப் பறக்கத் தொடங்கின. கால்களில் சிக்கியிருந்த வலையுடன் அவை பறந்து சென்ற காட்சியைக் கண்ட வேடன் பிரமித்துப்போனான். ஒருவேளை புருக்களுக்குள் சச் சரவு ஏற்பட்டு அவை விழுந்து விடலாம் என்று எண்ணிய அவன் சிறிது தூரம் அவற்றைப் பின்பற்றி ஓடினான். புருக்களோ ஒருமனத்துடன் மேன்மேலும் உயரப் பறந்து கண்ணுக்கெட்டாத தூரம் சென்று விட்டன. வேடன் ஏமாந்து திரும்பினான்.

வன்னிமரத்தில் இருந்து இந்த நிகழ்ச்சியை எல் லாம் கவனித்துக் கொண்டிருந்த இலகுபதனன் புருக் களைத் தொடர்ந்து பறந்து சென்றது. சித்திரக்கிரீ வன், தன் பரிவாரப் புருக்களை நோக்கி, "கண்டகிநதி தீரத்தில் சித்திரவனம் என்ற காடு இருக்கிறது. அங் குள்ள ஒரு வளையில் என் நண்பனான இரணியகன் என்ற எலியரசன் வசிக்கிறான். அவனுடைய உதவி யால் நாம் இந்த வலையிலிருந்து விடுபடலாம். அங்கே செல்வோம்," என்று கூறியது. அவ்வாறே புருக்கள் பறந்து சென்று இரணியகனின் வளையருகே இறங் கின. இவற்றைப் பின்பற்றி வந்த காகம் ஒரு மரத் தின்மீது அமர்ந்து நடப்பதைப் பார்த்துக் கொண் டிருந்தது.

சித்திரக்கிரீவன் வளையின் வாய்க்கு அருகே வந்து, "நண்பா, நீ ஏன் வெளிவந்து என்னை வர வேற்கவில்லை? உனது மித்திரனை சித்திரக்கிரீவ னைக் கண்டு நீ ஏன் பயப்படுகிருய்?" என்றது. பற வைகளின் அரவங்கேட்டதும் தன் வளைக்குள் பதுங் கிக்கொண்ட இரணியகன், சிநேகிதனின் குரலைக் கேட்டவுடன் வெளியே வந்தது. சித்திரக்கிரீவனது வருகையினுல் தனக்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியைத் தெரிவித்த பிறகு, எலியரசு புருக்களின் அவதியைக் கண்டது. உடனே அது தன் நண்பனை நோக்கி, "புத்திக் கூர்மையுள்ள உனக்கு இத்துன்பம் எப்படிச் சம்பவித்தது?" என்று கேட்டது.

புருவரசு, "நம் அறிவும் திறமையும் விதிமுன் என்ன செய்யும்?" என்று பதிலளித்தது.

இரணியகன், "நீ சொல்வது உண்மைதான். யானையும் பாம்பும் மனிதருக்கு அடங்கி விடுகின்றன. சூரியனும் சந்திரனும் கிரகண காலத்தில் மறைக்கப் படுகிருர்கள். அறிவாளிகளும் பல துயரங்களுக்கு ஆளாகிருர்கள். இவையெல்லாம் தெய்வத்தின் மகி மையால் நிகழ்கின்றன என்ருது வேறென்ன கூற முடியும்?" என்றது.

இப்படிக் கூறியபின், இரணியகன் தன் நண்ப ஞன சித்திரக்கிரீவனின் கால்கள் சிக்குண்டிருந்த வலைப்பகுதியை மட்டும் தன் பற்களால் கத்திரிக்கத் தொடங்கியது.

புருவரசு, "நண்ப, என்னை விடுவிப்பதற்கு முன், என் பரிவாரங்களைப் பிணிக்கும் வலைப் பகுதிகளை

முதலில் வெட்டிவிடு,'' என்று கேட்டுக் கொண்டது. அதற்கு இரணியகன், "உங்கள் எல்லோருடைய கால்களையும் விடுவிக்க என் பற்களுக்குச் சக்தி இருப்பது சந்தேகமே. முதலில் உன்னை விடுவிக்கிறேன்; பிறகு என் சக்திக்குத் தகுந்தவாறு, மற்றப் புருக்களின் கால்களைப் பிணிக்கும் கயிறுகளையும் அறுக்கிறேன்,'' என்றது.

சித்திரக்கிரீவன், "உன்னால் முடிந்தவரையில் வலைக் கயிறுகளை வெட்டினால் போதும். ஆனால் முதலில் இந்தப் புருக்களை ஒவ்வொன்றாக விடுவி; முடிந்தால் கடைசியில் என்னை விடுவி; இல்லாவிடில் வேண்டாம்'' என்றது.

இரணியகன், "நீ உன் பரிவாரங்களின் க்ஷேமத்தையே முதன்மையாகக் கருதுகிறாய். உன்னைப் போன்ற அரசர்கள் என்றும் கேடுறமாட்டார்கள்,'' என்று சொல்லிவிட்டு, சித்திரக்கிரீவன் உட்பட எல்லாப் புருக்களையும் விடுவித்து மகிழ்ச்சியில் ஆழச்செய்தது. சிறிதுநேரம் இரு நண்பரும் சந்தோஷத்துடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தபின் புருவரசு இரணியகனிடம் விடை பெற்றுக் கொண்டு பரிவாரங்கள் பின் தொடரப் பறந்து சென்றது.

இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த இலகுபதனன் என்ற காகம், இரணியகனைத் தன் நண்பனாகச் செய்து கொள்ள விரும்பியது. இந்த நோக்கத்துடன் காகம் வளையினருகே வந்து, "இரணியகா! உத்தம நட்பின் தன்மையை இப்பொழுது தான் அறிந்தேன். என்னையும் உன் சிநேகிதனாக ஏற்றுக் கொள்,'' என்று வேண்டிக்கொண்டது.

வளையிலிருந்த இரணியகன், "நீ எங்கள் இனத்தாரை இரையாகக் கொள்பவன். நீயும் நானும் நட்பாயிருப்பது எப்படி? சமமாயிருப்பவர்களே சிநேகமாகத் தக்கவர்கள்," என்றது.

இலகுபதனன், "நீ சந்தேகிப்பது இயற்கையே. ஆனால் என் விஷயத்தில் நீ ஐயுறல் கூடாது. உன்னிடம் சிநேகம் பெற்றால் உயிர்வாழ்வது, இல்லாவிடில் இங்கேயே பட்டினியிருந்து உயிரை விடுவது என்று நான் நிச்சயித்துவிட்டேன். என் உறுதியை நீ சோதித்தறியலாம்," என்று பதிலளித்தது.

இதைச் செவியுற்ற இரணியகன், காகத்தினிடம் கொண்ட சந்தேகம் நீங்கப்பெற்று, அதனுடன் நெருங்கிய நட்புப் பூண்டது. ஒன்று தேடிய இரையை மற்றொன்றுடன் பகிர்ந்துண்பதும், மன மொத்துச் சம்பாஷிப்பதுமாக அவ்விரண்டும் காலங் கழித்தன.

## பயிற்சி

I பொருள் கூறு:—

வாசஸ்தானம், அடவி, தோஷம்கற்பி, செவிசாய்த்து, இக்கட்டு, ஒருசேர, அக்கணமே, பிரமித்து, வளை, நதிதீரம், அரவம், சம்பவித்தது, கிரகணம், கேடுறு, இரை, சோதித்தறி, பகிர்ந்து.

II உன் சொந்த வாக்கியங்களில் பின்வரும் சொற்களை உபயோகி:—

செவிசாய், இக்கட்டு, ஒருசேர, அரவம், கேடுறு, இரை, பகிர்ந்து.

III விடை கூறு:—

1. வன்னிமரத்தினடியில் வேடன் என்ன செய்தான்?
2. சித்திரக்கிரீவன் என்ன ஐயுற்றது?

3. புருக்களெல்லாம் வலையில் சிக்கியதும், சித்திரக்கிரீவனும் ஏன் வலையில் அகப்பட்டுக் கொண்டது ?

4. புருக்கள் வேடனிடம் அகப்படாமல் தப்பியது எங்ஙனம் ?

5. இரணியகன் சித்திரக்கிரீவனை முதலில் விடுவிக்க வந்த பொழுது, புருவரசு என்ன கூறியது ?

6. இலகுபதனன், எலியரசின் நட்பை எவ்வாறு பெற்றது ?

IV இலக்கணம்:—

1. உயிர் எழுத்துக்களில் குற்றெழுத்துக்கள் யாவை ? நெட்டெழுத்துக்கள் யாவை ?

2. வல்லினம், மெல்லினம், இடையினம்—இவையாவை ?

3. பின்வரும் வாக்கியங்களில் சில எழுத்துப் பிழைகள் உள்ளன; அவற்றைத் திருத்தி அமை:

(அ) நாந்கு நாட்கல் சென்றபின் அந்த வாளைப்பளங்கள் அளுகி விட்டன.

(ஆ) பரவைகல் ஆகாயத்தில் பரந்து செல்கின்றன.

(இ) தீ எறியும்போது குலிர் காய்வதர்கு வசதி இருக்கும்.

## 3. யானைகளைப் பழக்குதல்

"இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்" என்ற பழமொழியைப் பெற்றுள்ளது யானை. அது மிகவும் விலையுயர்ந்த மிருகம் என்பதே இப்பழமொழியின் கருத்து. யானையை நீங்கள்



யானைகள் மரங்களை அடுக்குதல்

கோவில்களில் பார்த்திருக்கலாம். சுவாமி புறப்பாட்டுக்கு முன்னால் அலங்காரமாக அது செல்லும். முற்காலத்து அரசர்கள் யானைப் படைகள் வைத்திருந்ததாக நீங்கள் தேச சரித்திரத்தில் படித்திருப்பீர்கள். யானைத் தந்தம் விலையுயர்ந்தது; அதனால் அழகிய சீப்புக்கள், விக்கிரகங்கள் முதலியன செய்கிறார்கள். மேற்குத்தொடர்ச்சி மலைப் பிராந்தியங்களிலும் மைசூரிலும்

காடுகளில் வெட்டப்பட்ட பெரிய மரங்களை இழுத்து வருவதற்குப் பழக்கிய யானைகளை உபயோகிக்கிறார்கள்.

மிருகங்களிலெல்லாம் யானை மிகப் பெரியது; பலம் மிகுந்தது. அப்படியிருந்தும் மனிதன் அதைத் தனக்கு அடங்கி நடக்கச் செய்கிறான். யானையின் பயந்த சுபாவமும், சாந்தமான குணமுமே இதற்குக் காரணங்களாம். யானை எப்படிப் பழக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வோம்.

காட்டிலே சுயேச்சையாய்த் திரிந்து கொண்டிருக்கும் யானைகள் சற்று மூர்க்ககுணமுள்ளவையே. அவைகளிடம் மனிதர் அகப்பட்டுக் கொண்டால் பிராணாபத்து ஏற்படும். பழக்கப்பட்ட யானைகள் முற்றிலும் சாந்தகுண மடைகின்றன. எனவே காட்டு யானைகளைப் பழக்குதல் அபாயம் நிறைந்த தொழிலே.

முற்காலத்தில் யானைகளைப் பிடிக்கக் கையாளப்பட்டமுறை சிறந்ததன்று. யானைகள் சஞ்சரிக்கும் காட்டில் பெரிய குழிகள் வெட்டுவார்கள். அவை சுமார் 10 அடி நீளமும் அகலமும், 12 அடி ஆழமும் உடையவையாக இருக்கும். குழியின் மேல் நீளமான தட்டைகளைப் பரப்பி மண்ணைத்தூவி, புல், செடி, முதலியவற்றைப் போட்டு வைப்பார்கள். சாதாரணமாகப் பார்க்கும்பொழுது குழி இருப்பது தெரியாது. அவ்வழியே வரும் யானை குழியில் விழுந்துவிடும். பிறகு பழக்கிய யானைகளைக் கொணர்ந்து குழியில்விழுந்த யானையை வெளியே இழுப்பார்கள். அதைப் பலமான கயிறுகளால் கட்டி இழுத்துச் சென்று பழக்கி விடுவார்கள். இதுதான் பழையகால முறை. சிற்சில

சமயங்களில் குழியில் விழுந்த யானைக்குப் பலமான காயம்பட்டு அது இறந்து விடுவதுண்டு.

தற்கால முறை வேறுவிதமானது. மைசூர், இலங்கை முதலிய இடங்களில் இம்முறையைத்தான் கையாளுகிறார்கள். இதற்குக் "கெட்டா" என்று பெயர். காட்டில் வாழும் யானைகள் கூட்டங் கூட்டமாகத்தான் வசிக்கும். இவற்றில் ஒரு கூட்டம் இருக்கும் இடத்தைத் தெரிந்து கொள்வார்கள். அவ்விடத்துக்குச் சிறிது தூரத்தில் சுமார் ஒரு பர்லாங் நீளமும் அகலமும் உள்ள இடத்தைச் சுற்றிப் பலமான மரங்களைக்கொண்டு வேலி அமைப்பார்கள். வேலிக்கு வெளியே அவ்விடத்தைச் சுற்றிலும் 10 அடி அகலமும் ஆழமும் உள்ள குழி வெட்டுவார்கள். பெரிய சிறைபோல் அமைக்கப்பட்ட இவ்விடத்திற்குச் சில வாயில்கள் உண்டு. வாயில்களுக்கு வெளியே மட்டும் குழி தோண்டப்பட்டிராது. இங்கே பலமான கதவுகள் இருக்கும். முதலில் இவை திறந்து வைக்கப்பட்டிருக்கும். இந்த முதற் சிறைக்குள் 'கயிறு போடும் சிறை' ஒன்று உண்டு. யானையைப் பிடிக்கும் இடத்தைத் தயார் செய்தபின், ஆயிரக்கணக்கான கூலியாட்களும், வேடர்களும் யானைக் கூட்டத்தையும் சிறையிடத்தையும் சேர்த்து வளைத்துக் கொள்வார்கள். அதிக சப்தஞ் செய்யும் முரசு, பேரி போன்ற வாத்தியங்களை முழக்கி யானைகளைப் பயமுறுத்திச் சிறைக்குள் போகும்படி செய்வார்கள். இதற்குப் பல வாரங்கள் பிடிக்கும். யானைக் கூட்டம் வாயில்கள் வழியாகச் சிறையிடத்தில் நுழைந்த பின் கதவுகளை மூடி விடுவார்கள். அவை வேலியைச் சாய்த்து வெளியே ஓடி

விடாமல் இருப்பதற்காக, அவ்விடத்தைச் சூழ்ந்துள்ள ஆட்கள் உரத்த சப்தங்களைச் செய்வதுடன் பெரிய நெருப்புகளையும் எரிய விட்டுக் கொண்டிருப்பார்கள். இந்தச் சப்தத்தையும் நெருப்பையும் தாண்டிச்செல்ல யானைகள் பயப்படுவதால் அவை சிறைக்குள்ளேயே இருக்கும்.

சிறைப்பட்ட யானைகளைப் பலமான கயிறுகளால் கட்டவேண்டுவது அடுத்த வேலையாகும். இந்த வேலையில் சிறந்த அனுபவம் வாய்ந்த சிலர் பழகிய யானைகளில் ஏறிக்கொண்டு முதற் சிறைக்குள் செல்லுவார்கள். காட்டு யானைகள் கயிறுபோடும் சிறைக்குள் விரட்டப்படும். அவை அந்தச் சிறிய இடத்தில் அதிகமாக அசைய வழியின்றி நின்று கொண்டிருக்கும். வெளியே உறுதியான முளைகளைத் தரையில் அடித்து வைப்பார்கள். பலமான கயிறுகளில் சுருக்கிட்டுக் காட்டு யானைகளின் கால்களிலும் கழுத்திலும் விழும்படியாக வீசி அவற்றைக் கட்டுவார்கள். கயிறுகளின் மறுமுனைகள் உறுதியான முளைகளில் பிணைக்கப்படும். பழக்கப்பட்ட யானைகள் இந்த வேலைகளில் மிகவும் உதவி செய்கின்றன.

புதிதாகப் பிடிக்கப்பட்ட யானையைப் பல நாட்கள் பழக்க வேண்டும். அப்பொழுதெல்லாம் அது கயிற்றினுல் கட்டப்பட்டுத்தானிருக்கும். பழகிய யானை ஒன்றை அருகில் வைத்துக்கொண்டே புது யானையைப் பழக்குவார்கள். அதன் மூர்க்க குணம் தணிந்து நல்ல பழக்கம் ஏற்பட்டபின் அதை வேலைக்கு வைத்துக் கொள்வார்கள் அல்லது விற்றுவிடுவார்கள்.

தற்கால முறையில் முற்கால முறையிலுள்ளது போன்ற ஆபத்தில்லை என்பது தெரியவரும். யானைகளைப் பழக்கி உபயோகிப்பதால் சில கஷ்டமான வேலைகளை எளிதாகச் செய்ய முடிகிறது. யானைகளைப் பிடிக்கும் பொழுது நூற்றுக்கணக்கான ஆட்களுக்கு வேலை கிடைக்கிறது. நம் நாட்டுச் சுதேச மன்னர்களும் கோவிலதிகாரிகளும் யானைகளை விலைக்கு வாங்குவதால் பிடித்த யானைகளை இலாபகரமாக விற்கவும் கூடும்.

## பயிற்சி

I பொருள் கூறு :—

புறப்பாடு, அலங்காரம், பிராந்தியம், சுபாவம், மூர்க்க குணம், பிராணுபத்து, சஞ்சரி, வளைத்துக்கொள், முளை.

II சொந்த வாக்கியங்களில் உபயோகி :—

புறப்பாடு, சுபாவம், மூர்க்க குணம், பிராணுபத்து, சஞ்சரி.

III விடை கூறு :—

1. யானையைப் பற்றிய பழமொழிகளில் உனக்குத் தெரிந்தவற்றை எழுது.
2. யானையை எப்படி உபயோகிக்கிறார்கள் ?
3. தந்தத்தினால் செய்யப்படும் பொருள்கள் யாவை ?
4. காட்டு யானைக்கும் பழக்கப்பட்ட யானைக்கும் சுபாவத்தில் என்ன வித்தியாசமுள்ளது ?
5. காட்டு யானையைப் பிடித்துப் பழக்க, முற்காலத்தில் கையாளப்பட்ட முறையை விவரி.
6. யானைக் கூட்டத்தைப் பிடிக்க உதவும் 'கெட்டா' என்ற சிறையை அமைப்பது எப்படி ?
7. சிறைக்குள் விரட்டப்பட்ட யானைகள் எப்படிப் பழக்கப் படுகின்றன ?
8. யானைகளைப் பழக்குதல் எவ்வாறு ஒரு இலாபகரமான தொழிலாகிறது ?

IV இலக்கணம் :—

1. போகிருன், போவான், போனுன், போதல், போவோம்—இந்தச் சொற்களில் எல்லாம் 'போ' என்ற பாகம் மாருது வருகிறதல்லவா? அந்த பாகத்திற்குப் பகுதி என்று பெயர். சொற்கள் பிறத்தற்கு அடியாயுள்ள பாகம் பகுதி எனப்படும்.

2. பின்வரும் சொற்களில் பகுதியை மட்டும் கூறு:

பிடித்தான், பிடிப்பு: உண்டான், உணவு: வருகிருன், வந்தான்; விரட்டினுன், விரட்டுதல்.

3. பின்வரும் பகுதிகளை உபயோகித்து இரண்டிரண்டு சொற்கள் அமை :—

தின், விடு, தேய், கேள்.

# 4. வீரமா முனிவர்

ஐரோப்பிய நாட்டினர் சிலர் தமிழைக் கற்றுப் பெரும் புலமை எய்தி நூல்கள் இயற்றித் தமிழுக்குத் தொண்டாற்றியுள்ளனர். அவர்களில் ஒருவர் வீரமா முனிவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டன் டைன் ஜோஸப் பெஸ்கி. இவர் இத்தாலி நாட்டில் 1680-ல் பிறந்தவர். இவரது தந்தையார் கண்டல்போ பெஸ்கி; தாயார் எலிஸபெத். ஜோஸப் பெஸ்கி சிறு வயது முதலே கல்வியில் ஊக்கம் கொண்டு பயின்ருர். சமயத் தொண்டில் ஈடுபட அவருக்கு ஆர்வம் இருந்தமை யால் கிறிஸ்தவ சமய நூல்களேயும் கற்று வந்தார். பள்ளிப் படிப்பு முடிந்ததும் கிறிஸ்தவ சமயப் பிரசார சங்கத்தில் சேர்ந்து அதில் பயிற்சி பெற்ருர். பிறகு சில ஆண்டுகள் ஆசிரியராகச் சில கலாசாலேகளில் வேலே பார்த்தார். அதே சமயத்தில் சமய நூல்கள், மனேதத்துவ சாஸ்திரம், பிரஞ்சு, ஹீபுரு முதலிய மொழிகள் எல்லாம் கற்றுத் தேர்ந்தார். அவர் தம் முப்பதாவது வயதில் இந்தியா வந்து சேர்ந்தார். இங்கு தமிழ் நாட்டில் சமயப் பிரசாரம் செய்யத் தீர்மா னித்து மதுரை ஜில்லாவிலுள்ள காமநாயக்கன் பட்டி என்னும் கிராமத்தில் தங்கினர். இவருக்கு முன் ஏற் கெனவே சில பாதிரிமார்கள் தமிழ் நாட்டில் மதப் பிர சாரம் செய்து கொண்டிருந்தனர். ஜோஸப் பெஸ்கி யும் அவர்களுடன் சேர்ந்து சில காலம் மக்களுக்குக் கிறிஸ்தவ மத உண்மைகளேப் போதித்துப் பலரைக் கிறிஸ்தவ சமயத்தினராகச் செய்தார்.

அக்காலத்தில் தமிழ் நாட்டில் பல மன்னர்களும் ஜமீன்தார்களும் பாளேயப்பட்டுக் காரர்களும் ஆங்

காங்கு ஆட்சிபுரிந்து வந்தார்கள். அவர்களில் சிலர் கிறிஸ்தவ சமயத்தை வெறுத்தனர். எனவே அம் மதத்தைப் போதித்து வந்த பிரசாரகர்கள் பல துன்



வீரமா முனிவர்

பங்களுக்கு உட்பட்டனர். எனினும் நம் பெஸ்கி போன்ற பாதிரிமார்கள் இத்துன்பங்களைப் பொறு மையுடன் சகித்துக் கொண்டு பொது மக்களுடன் நெருங்கிப் பழகி வந்தமையால் கிறிஸ்தவ மதம் சிறிது சிறிதாகப் பரவலாயிற்று.

ஜோஸப் பெஸ்கி தஞ்சையில் சிறிது காலம் தங்கிவிட்டுப் பிறகு திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள குருக்கள்பட்டிக்குச் சென்று மதபோதனை செய்து வந்தார். இக்காலங்களில் தமிழ் மொழியை நன்கு கற்று வந்தார். தமது பிரசாரங்களைத் தமிழிலேயே செய்யத் தொடங்கினர். தூய வாழ்க்கையும், தமது உபதேசங்களின்படி தாமே நடக்கும் தன்மையும் கொண்ட இப்பெரியாரின் தமிழ்ப் பிரசங்கங்களைக் கேட்ட பல மக்கள் இவரை மிகவும் கௌரவித்தனர். பலர் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தனர். பெஸ்கி ஓர் முனிவர் போலவே உடையுடுத்து எளிய வாழ்க்கை நடத்தி, சதா தெய்வ சிந்தனையுடையவராய் விளங்கியமையால் தமிழ் நாட்டு மக்கள் அவரை வீரமா முனிவர் என்றும் தைரியநாத சுவாமிகள் என்றும் அழைக்கத் தொடங்கினர்.

தஞ்சை ஜில்லாவைச் சேர்ந்த ஏலாக் குறிச்சி என்ற கிராமத்துக்கு திருக்காவலூர் என்ற புதுப் பெயர் ஏற்பட்டது. அங்கு வீரமா முனிவர் சில காலம் தங்கியிருந்தார். அவ்வூரில் ஒரு மாதா கோவில் அமைத்தார். அதில் ஏசுகிறிஸ்து நாதரின் அன்னையாரான மரியம்மையின் திருவுருவத்தை ஸ்தாபித்தார். கிறிஸ்தவர் அடைக்கல மாதா என்று அவ்வுருவத்தை அன்புடன் தியானிப்பர். வீரமா முனிவர் தமிழில் சிறந்த புலமை பெற்றிருந்தார். அன்னை மரியம்மையின் மீது அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு; அடைக்கலமாலை, திருக்காவலூர்க் கலம்பகம் முதலிய பக்திப்பாக்கள் அவரால் இயற்றப்பட்டுள்ளன.

அக்காலத்தில் நாட்டில் நிலையான அரசாங்கம் இல்லாமையால் படைவீரர்களால் பொதுமக்கள் பல இன்னல்களை அடைந்தனர். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகக் கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்தது. அத்தருணங்களில் வீரமா முனிவர் படைத்தலைவரைக் கண்டு பேசி மக்களின் துன்பங்களைத் தவிர்த்துள்ளார். தென்னாட்டில் நவாபாக இருந்த சந்தா சாகேபின் நட்பைத் தேடிக் கொண்டார். சமயப் பணியும் தமிழ்த் தொண்டும் இவருடைய முழுக் கவனத்தையும் கவர்ந்திருந்தன. நவாபின் நட்பினுல் சில ஆண்டுகள் இத்துறைகளில் அமைதியாக ஊழியம் செய்ய முடிந்தது. இப்பெரியார் 1757-ல் மண்ணுலக வாழ்வை நீத்தார்.

வீரமா முனிவர் செய்த தமிழ்த் தொண்டு என்னவென்று தெரிந்து கொள்வோம். பரமார்த்த குரு கதை, வேதியர் ஒழுக்கம், வேதவிளக்கம் என்னும் மூன்று வசன நூல்கள் இவரால் இயற்றப்பட்டன. முற்காலத்தில் தமிழில் வசன நூல்களே இல்லை. செய்யுள் நூல்கள் கல்விமான்களே படித்தறியக்கூடியவையாக இருந்தன. எளிய உரைநடை நூல்களை எழுதும் வழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் வீரமா முனிவரே என்று கூறலாம். கிறிஸ்தவ மதக் கொள்கைகளை எல்லோரும் தெரிந்து கொள்ளும்படி எழுதப்பட்டது வேத விளக்கம். பரமார்த்தகுரு கதையோ நகைச்சுவை மிகுந்து மக்கள் யாவரும் இன்புறக்கூடிய ஒரு கதை. வேதியர் ஒழுக்கத்தில் கிறிஸ்தவப் பிரசாரகர்கள் கடைப்பிடிக்கத்தக்க ஒழுக்கங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

TB 031 N52

வீரமா முனிவரின் தமிழ்த் தொண்டில் அடுத்த படி குறிப்பிடத்தக்கது சதுரகராதி. அக்காலத்தில் சூடாமணி முதலிய செய்யுள் நிகண்டுகளே இருந்தன. அ, ஆ வரிசையில் தமிழ்ச் சொற்களுக்குப் பொருள் தரும் அகராதி இல்லை. வீரமா முனிவர் பல ஆண்டுகள் உழைத்துப் புது முறையில் சதுரகராதியை இயற்றி வெளியிட்டார். தற்காலத்திய தமிழ் அகராதிகளுக்கு இது ஒரு வழிகாட்டியாக அமைந்தது. தமிழ் லத்தீன் அகராதி ஒன்றும் இவர் இயற்றியுள்ளார். லத்தீன் மொழி தெரிந்தவர்கள் தமிழைக் கற்பதற்கு இது பயன்படக்கூடியது.

திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால், ஆகிய இரு பகுதிகளையும் லத்தீனில் மொழி பெயர்த்து மேனாட்டினர் திருக்குறளின் சிறப்பை அறியச் செய்தார். பழைய தமிழ் இலக்கண நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்த இவர் தொன்னூல் விளக்கம் என்ற எளிய இலக்கண நூல் ஒன்றையும் இயற்றினார். பாமர மக்கள் பேசும் தமிழின் அமைதிகளைக் கொடுந்தமிழ் இலக்கணம் என்ற நூலில் விளக்கியுள்ளார்.

இந்த நூல்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் தேம்பாவணி என்ற ஒரு பெருங்காப்பியத்தையும் இவர் பாடியுள்ளார். ஏசுநாதரை வளர்த்த தந்தையராகிய சூசையப்பர் (ஜோஸப்) சரிதத்தைக் கூறும் நூல் இது. ஏசுநாதரின் சரிதமும் கிறிஸ்தவ மதக்கொள்கைகளும் இதில் விரிக்கப்பெற்றுள்ளன. பெருங்காப்பியத்திற்குக் கூறப்பட்டுள்ள இலக்கணங்களைப் பெற்று சுமார் 3600 செய்யுட்களால்

86506

ஆன இந்நூல் வீரமா முனிவரின் தமிழ்ப்புலமை, கவித்திறன், சமயப்பற்று ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுவதாயுள்ளது.

வீரமா முனிவரின் தமிழ்த் தொண்டு பல துறைகளிலும் பரவி நிற்கிறது. உரைநடை நூல், இலக்கணம், அகராதி, பெருங்காப்பியம், சிறுகாப்பியம் ஆகிய எல்லாத் துறைகளிலும் இவரது உழைப்பின் பயன் சிறந்து விளங்குவதைக் காணும் நாம் வியப்புருமலிருக்க முடியாது.

## பயிற்சி

I பொருள் கூறு :—

தொண்டாற்று, இயற்பெயர், சமயநூல், சமயத்தொண்டு, பிரசாரம், மனோதத்துவ சாஸ்திரம், பாஷையப்பட்டு, தெய்வ சிந்தனை, ஈடுபாடு, பக்திப்பாக்கள், இன்னல், சமயப்பணி, கலம்பகம், மண்ணுலக வாழ்வை நீத்தார், வசன நூல், கல்விமான், ரஸிக்கக்கூடிய, வழிகாட்டி, பெருங்காப்பியம், தெளிவாக.

II உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி:—

சமயத்தொண்டு, ஈடுபாடு, இன்னல், வழிகாட்டு, தெளிவாக.

III விடை கூறு:—

1. வீரமா முனிவரின் இயற்பெயர் யாது ?

2. வீரமா முனிவர் எத்துறைகளில் கல்வி பயின்றார் ?

3. வீரமா முனிவர் தமிழ் நாட்டுக்கு வந்த காலத்தில் நாட்டு நிலை எவ்வாறிருந்தது ?

4. வீரமா முனிவர், தைரியநாத சுவாமிகள் என்ற பெயர்கள் இவருக்கு ஏற்படக் காரணம் என்ன ?

5. திருக்காவலூர் என்ற பெயர் எந்தக் கிராமத்துக்கு ஏற்பட்டது ?

6. திருக்காவலூரின் விசேஷமென்ன ?

7. சந்தா சாகேபின் நட்பினுல், வீரமா முனிவர் மக்களுக்கு என்ன நன்மை செய்ய முடிந்தது ?

8. வீரமா முனிவர் இயற்றிய வசன நூல்கள் யாவை ?

9. சதுரகராதியின் சிறப்பு யாது ?

10. வீரமா முனிவர் இயற்றிய இலக்கண நூல்கள் யாவை ?

11. தேம்பாவணியில் விவரிக்கப்பட்டுள்ள கதை யாரைப் பற்றியது ?

12. தேம்பாவணியிலிருந்து வீரமா முனிவரின் தமிழ்ப் புலமை எவ்வாறு விளங்குகிறது ?

IV இலக்கணம்:—

1. அவனே + பார்த்தேன் = அவனேப் பார்த்தேன்.
2. எனக்கு + கொடுத்தான் = எனக்குக் கொடுத்தான்.
3. இராமனே + தடுக்கிருன் = இராமனேத் தடுக்கிருன்.
4. நண்பனுக்கு + சோறு = நண்பனுக்குச் சோறு.

மேலே காட்டிய உதாரணங்களிலிருந்து, இரண்டாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமைப் பெயர்களுக்குப் பின்வரும் க, ச, த, ப ஆகிய நான்கு வல்லெழுத்துக்களும் மிகும் என்று அறியலாம். மெல்லெழுத்துக்களும் இடையெழுத்துக்களும் மிகா.

சேர்த்து எழுது:—

அவனே + கண்டேன்; எனக்கு + வாங்கினுயா; உன்னே + தொடமாட்டேன்: இராமனுடைய + பை; அவனு + பெரியவன்.

## 5. ஹென்றி போர்டு

ஏழையிலும் ஏழையாக வாழ்க்கையைத் தொடங்கித் தம் அறிவு ஆற்றல்களால் முன்னேறி, செல்வச் சீமான்களாகவும், பெருந் தொழிலதிபர்களாகவும் ஆயினோர் பலருண்டு. இத்தகையவர்களில் தலை சிறந்தவர் அமெரிக்க நாட்டினரான ஹென்றி போர்டு ஆவர்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த டெட்ராயிடு நகருக்கு அருகே ஒரு கிராமத்தில் 1863-ல் ஹென்றி போர்டு பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு விவசாயி ஆயினும், இவருக்குச் சிறு வயது முதலே எந்திரங்களின் அமைப்பு, அவை இயங்கும் விதம் முதலியவற்றிலேயே கருத்துச் சென்றது. எனவே தம் பதினாறும் வயதில், இவர் எந்திரத் தொழிற்சாலை யொன்றில் வேலைக்கமர்ந்தார். தம் வேலையை ஒழுங்குறச் செய்து கூலியைப் பெற்றதுடன் அமையாது, எந்திரங்களைத் திருத்தி அமைப்பதிலும், புதிய எந்திரங்களை அமைப்பதிலும் ஆர்வங் கொண்டு பல ஆராய்ச்சிகளையும் செய்து வந்தார்.

பிரான்ஸ் நாட்டில்தான் முதன் முதல் மோட்டார் வண்டி அமைக்கப்பட்டது. மோட்டார் வண்டியில் பெட்ரோல் எண்ணெயின் ஆவி எரிக்கப்படுகிறது என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும். நீராவி எஞ்சினிலிருந்து வேறுபட்ட அமைப்புடையது பெட்ரோல் எஞ்சின். பின்னதில் பெட்ரோல் ஆவியும் காற்றும் கலந்து ஓர் அறைக்குள் செலுத்தப்பட்டு, ஒரு மின் பொறியினால் வெடிக்கப்படும். அப்பொழுது பிறக்கும் சக்தியினால் ஓர் உருளை முன்னும் பின்னும் தள்ளப்

பட்டு மோட்டார் சக்கரத்தின் அச்சு சுற்றப்படும். இத்தகைய எஞ்சினுக்கு உள்ளிட தகன எஞ்சின் என்று பெயர். இந்த எஞ்சின்களின் தத்துவம் இது தான் எனினும், வெவ்வேறு தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பெட்ரோல் எஞ்சின்களின் அமைப்பு முறையில் சிற்சில பேதங்களிருக்கும். பெட்ரோல்



ஹென்றி போர்டு

எஞ்சின் ஒன்றைத் தாமே அமைக்க போர்டு முயற்சித்துத் தமது முப்பத்துமூன்றும் வயதில் ஒரு மோட்டார் வண்டி செய்து முடித்தார். மலிவாக மோட்டார்வண்டிகள் தயாரித்து விற்க வேண்டுமென்பதே இவருடைய நோக்கமாயிருந்தது. எனவே அதிக மூலதனம் திரட்டி மோட்டார் தொழிற்சாலை யொன்று அமைக்க ஏற்பாடு செய்தார். இவர் நினைத்தபடி அவ்வளவு மலிவாக மோட்டார் வண்டிகள் தயாரிக்க முடியாமற் போன

தால் அந்த மோட்டார் கம்பெனி முறிந்தது; இதே போல மற்றொரு கம்பெனிக்கு மூலதனம் திரட்டி இரண்டாவது தடவை முயற்சித்தார். அந்த முயற்சி யிலும் அவர் தோல்வியே அடைந்தார்.

இவ்வாறு இருமுறை தோல்வியே ஏற்படினும் ஹென்றி போர்டு மனந்தளறவில்லை. அதேசமயத்தில் பெட்ரோல் எஞ்சின் அமைப்பில் சீர்திருத்தம் செய்ய ஆராய்ச்சிகளையும் நடத்தி வந்தார். பெட்ரோல் எஞ் சினில் 'கார்புரட்டர்' என்ற ஒரு பகுதி உண்டு. இதை போர்டு மிகச் சிறந்த முறையில் அமைத்தார். இதன் பிறகு இவர் தொடங்கிய போர்டு மோட்டார் கம்பெனி வெற்றிகாணத் தொடங்கியது. "மலிவாக" மோட்டார் வண்டிகள் தயாரித்து சாதாரணச் செல்வ முடையவர்களும் வாங்கும்படி செய்யவேண்டும்" என்ற நோக்கம் கைகூடத் தொடங்கியது.

தற்காலத்தில் போர்டு மோட்டார் தொழிற்சாலை யில் இலட்சக்கணக்கான மோட்டார்கள் தயாரிக்கப் படுகின்றன. தாதுப் பொருள்களிலிருந்தே இரும்பு முதலிய உலோகங்களைத் தயாரித்து, மோட்டாரின் எல்லாப் பாகங்களையும் செய்து பொருத்தி, சில நாட் களுக்குள்ளேயே மோட்டார் வண்டிகளை முடித்து விடக்கூடிய எல்லாவிதத் தொழிற்சாலைகளும் சேர்ந்தே "போர்டு மோட்டார் தொழிற்சாலை" எனப் பெயர் பெற்றுள்ளது. இரும்புத்தாது, நிலக்கரி, வெட்டப்பட்ட மரம் ஆகியவை தொழிற்சாலைக்கு வந்து சேர்ந்தது முதல் சுமார் ஒரு வாரத்திற்குள் பளபள வென்று மெருகிடப்பட்ட மோட்டார்களா கின்றன என்று சொல்லப்படுகிறது.

ஹென்றிபோர்டின் தொழிற்சாலை தற்காலத்தில் மிகவும் பெருகியுள்ளது. வருஷந்தோறும் பல்லாயிரக் கணக்கான மோட்டார் வண்டிகள் அதில் செய்யப்படுகின்றன. இலட்சக்கணக்கான தொழிலாளர் அதில் வேலை செய்கின்றனர். தினசரி இலாபம் பல்லாயிரக் கணக்கான ரூபாய்கள் கிடைக்குமென்றால் அதன் மூல தன மதிப்பு ஆயிரங் கோடிக்கணக்கில் இருக்கும் என்று ஊகிக்கலாம்.

ஹென்றி போர்டு தம் தொழிலாளர்களுக்குப் போதுமான ஊதியம் அளிப்பதுடன், அவர்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் செய்து தந்திருக்கிறார். தம் தொழிலாளர்களுக்கு இலவச வைத்திய வசதியளிக்க ஒரு தனி ஆசுபத்திரி அமைத்துள்ளார். நோயுற்ற தொழிலாளிக்கு அதில் சிகிச்சை செய்யப்படுகிறது. சிகிச்சைபெறுங்காலத்திற்கும் தொழிலாளிக்குச்சம்பளம் அளிக்கப்படுகிறது. தொழிலாளிக்குச் சிறிதும் பணக் கவலை இல்லாத அளவுக்கு, சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்றும், அப்பொழுது தான் அவர்கள் வேலைமீது முழுக்கவனமும் செலுத்துவார்கள் என்றும் அவர் கருதினார். தமது கருத்துப்படியே தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுத்துப் பார்த்ததில் தொழிலில் அதிக இலாபம் கிடைப்பதைக் கண்டார். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் அதிகத் தகராறுகள் ஏற்படுவதுண்டு. ஆனால் போர்டு தொழிற்சாலையில் இத்தகைய தகராறுகள் ஏதுமில்லை.

தம் தொழிலில் கிடைக்கும் அளவற்ற இலாபத்தில் பெரும் பகுதியை அத் தொழிலை மேலும் விஸ்தரிப்பதற்கே போர்டு பயன்படுத்தி வந்தார்; அதனு

லேயே அத்தொழிற்சாலே மேலும் மேலும் பெருகி வந்துள்ளது. தொழில் பெருகப் பெருக இலாபமும் அதிகரித்து வந்துள்ளது. இந்த இலாபங்களேக் கொண்டு எத்தனேயோ தரும காரியங்களுக்கு நிதிகள் ஏற்படுத்தியுள்ளார். பல அமெரிக்க மாணவர்களுக்கும் அயல் நாட்டு மாணவர்களுக்கும் உயர்தரக் கல்விக் கான செலவு கொடுக்கப்படுகிறது.

குபேரனேப் போல் செல்வம் படைத்த ஹென்றி போர்டு எளிய வாழ்க்கையே நடத்தினர். குடிப்பழக் கமோ, புகையிலே போன்ற வஸ்துக்களின் உபயோக மோ அவரை அண்டியதில்லே. எளிய உணவையே புசித்து வாழ்ந்தார். ஓய்வு நேரங்களில் காடுகளிலும் சோலேகளிலும் பொழுது போக்குவதே அவருக்கு இன்பமளிக்கும் செயல். 1947-ம் ஆண்டில் ஹென்றி போர்டு மரணமடைந்தார். அவர் ஸ்தாபித்த தொழிற் சாலேகள் அவருடைய ஏற்பாடுகளின்படி நடந்து வரு கின்றன. ஒரு தொழிலதிபர் தம் இலாபத்தை எவ் வாறு தம் தொழிலாளிகளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கு அவர் சீரிய எடுத்துக் காட்டாக விளங்கினர்.

பயிற்சி

I பொருள் கூறு:—

செல்வச் சீமான், பெருந் தொழிலதிபர், ஐக்கிய, ஒழுங்குற, அமையாது, மலிவு, மூலதனம், மனந்தளர, வெற்றிகாண, கைகூட, மெருகிடப்பட்ட, இலவச, தகராறு, அண்டியதில்லே, எடுத்துக்காட்டு.

II பின்வரும் சொற்களே உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி:—

ஒழுங்குற, மலிவு, மூலதனம், வெற்றிகாண, தகராறு, எடுத்துக்காட்டு.

III விடை கூறு :—

1. ஹென்றி போர்டுக்குச் சிறு வயதில் எத்துறையில் ஆர்வம் இருந்தது?

2. பெட்ரோல் எஞ்சின் எப்படி வேலே செய்கிறது?

3. ஹென்றி போர்டின் நோக்கம் என்ன?

4. போர்டு ஆரம்பித்த மோட்டார் கம்பெனிகள் இரண்டு தடவை முறிந்து போனதற்குக் காரண மென்ன?

5. போர்டு எப்பொழுது வெற்றி கண்டார்?

6. 'போர்டு மோட்டார் தொழிற்சாலே'யில் எவ்வெத் தொழில்கள் நடைபெறுகின்றன?

7. போர்டு மோட்டார் தொழிற்சாலேயில் தொழிலாளர் எவ்வாறு நடத்தப்படுகின்றனர்?

8. போர்டு மோட்டார் தொழிற்சாலேயில் கிடைக்கும் இலாபம் எந்த எந்த வழிகளில் செலவிடப்படுகிறது?

9. ஹென்றி போர்டின் சொந்த வாழ்க்கை எவ்வாறிருந்தது?

IV இலக்கணம்:—

1. பின் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களேயும் வினேச் சொற்களேயும் எடுத்து எழுது:

(அ) இவர் எந்திரத் தொழிற்சாலே ஒன்றில் வேலேக்கு அமர்ந்தார்.

(ஆ) என்னுடைய நண்பன் என்னேக் காண வந்தபொழுது இரவு ஆகிவிட்டது.

2. பின் வரும் வாக்கியங்களில் பெயர்ச் சொற்களேத் தழுவும் சொற்கள் எவை? வினேச் சொற்களேத் தழுவும் சொற்கள் எவை?

(அ) நல்ல பையன் இங்கே வந்தான்.

(ஆ) கிழிந்த புத்தகம் வைத்திருக்கிருய்.

(இ) நாங்கள் வேகமாக ஓடினேம்.

(ஈ) என்னே ஏமாற்றிய நீ இங்கே நிற்காதே.

## 6. ராஜா ரவி வர்மா

ஓவியம், சிற்பம், இசை, நாட்டியம் முதலியவற்றைக் கலைகள் என்பார்கள். ஓவியம் என்பது சித்திரம் எழுதுதல். தகுந்த காகிதத்திலோ, துணியிலோ பலவித வர்ணப் பொருள்களைக் கொண்டு சைத்திரிகன் படம் எழுதுவான்; ஒரு நாட்டின் வரலாற்றில் இடம் பெற்ற தலைவர்கள், கடவுள் பக்தர்கள் புராணக் கதைகளில் வரும் வீரர்கள் அல்லது கடவுளர் இத்தகையோர் உருவங்களையும், இயற்கைக் காட்சிகளையும் ஒரு சைத்திரிகன் தன் ஓவியங்களுக்கு விஷயமாகக் கொள்வது வழக்கம்.

ஓவியக்கலையில் தேர்ச்சி பெற்ற நிபுணர்கள் நம் நாட்டில் பலர் உண்டு. இவர்களில் தலை சிறந்த ராஜா ரவி வர்மா என்பவர் 1848-ம் ஆண்டு திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்த கிளிமானூர் என்ற இடத்தில் பிறந்தார். திருவாங்கூர் ராஜவமிசத்தினருக்கும் ராஜா ரவி வர்மாவின் குடும்பத்தினருக்கும் விவாக சம்பந்தங்கள் உண்டு. எனவே நம் ஓவியர் திருவாங்கூர் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர் என்றே கருதலாம். ரவி வர்மாவுக்கு இரண்டு தம்பியரும் ஒரு தங்கையும் இருந்தனர். அக்குடும்பத்தினர் எல்லோரும் இசையிலோ ஓவியத்திலோ ஓரளவு திறமை பெற்றிருந்தனர்.

ராஜா ரவி வர்மா இளமைப் பருவத்தில் ஒரு ஆசிரியரிடம் சம்ஸ்கிருதம் பயின்றார். ஆனால் அவருக்கு இத்துறையில் அதிக ஆர்வம் ஏற்படவில்லை. கரியினால் தரையிலும் சுவர்களிலும் படங்கள் எழுது

வதில் இவர் முனைந்தார். இவருடைய மாமன் ராஜ ராஜ வர்மா என்பவர் ஒரு சிறந்த சைத்திரிகர். அவர் தம் மருமகன் ரவி வர்மாவின் மனப்போக்கு ஓவியத்



ராஜா ரவி வர்மா

தின்பால் செல்வதைக்கண்டு மகிழ்ந்து, அக்கலையின் நுட்பங்களைத் தமக்குத் தெரிந்த அளவு கற்பித்தார்.

ரவி வர்மாவுக்குப் பதின்மூன்று வயதாயிற்று. அப்பொழுது அவருடைய மாமன் ராஜ ராஜவர்மா, அவரை அழைத்துக் கொண்டு திருவாங்கூர் அரச சபைக்குச் சென்றார். மகாராஜா நம் இளம் ஓவியர் எழுதிய சித்திரங்களைக் கண்டு வியந்து, அவரைத்

தம் சமஸ்தானத்தில் ஆதரிக்க முன் வந்தார். அக்காலத்தில் திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு தியடோர் பென்ஸன் என்ற ஆங்கில ஓவியர் ஒருவர் வந்திருந்தார். மேனுட்டு ஓவியர்கள் கையாண்ட வர்ணங்களேயும் அவற்றைக் கூட்டும் முறைகளேயும் பென்ஸனிடமிருந்து ரவி வர்மா ஓரளவு கற்றுக் கொண்டார். பல ஆண்டுகள் வருந்திக்கற்று வர்ண ஓவியங்கள் எழுதுவதில் திறமை பெற்ருர்.

திருவாங்கூர் மகாராணியின் தங்கையை இவர் தம் இருபத்தைந்தாம் வயதில் திருமணம் செய்து கொண்டார். இதனுல் அரசருடைய ஆதரவு இவருக்கு மேலும் அதிகமாகக் கிடைத்தது. அரண்மனேயிலேயே ஓர் அறையில் இவர் தம் ஓவியங்களே வரைய வசதிகள் அமைத்துக் கொண்டார். சென்னே நகரில் நடைபெற்ற கலேக் கண்காட்சியில் ரவி வர்மாவின் சித்திரம் ஒன்று 1873-ல் வைக்கப்பட்டது; அதற்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசு கிடைத்தது. அதுமுதல் இவருடைய புகழ் நம் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது.

தற்காலத்தில் ரவி வர்மாவின் புகழுக்குக் காரணமாயுள்ள சித்திரங்களெல்லாம், அவருடைய புராணப் படங்கள் என்று கூறலாம். இராமாயணம், மகாபாரதம், பாகவதம் முதலிய காவியங்களும் புராணங்களும் இந்திய மக்களால் நன்கு அறியப்பெற்ற கதைகளாக இருந்து வருகின்றன. இவற்றில் கூறப்படும் வீரர்களும், மாதரசிகளும், கடவுளர்களும் இந்தியரின் மனத்தில் இடம் பெற்றுள்ளனர். இவர்களுக்கு உருவங்கொடுத்தவர் நம் ஓவியர் ராஜா ரவி வர்மா.

சகுந்தலை துஷ்யந்தன், கண்ணன் கோபிகைகள், நளன் தமயந்தி, ராமன் சீதை வன வாசம், பகீரதன் கங்கையைக் கொணர்ந்தது முதலிய புராண நிகழ்ச்சிகளை ரவி வர்மா வரைந்த படங்களின் உதவியால் தான் நாம் நமது மனக்கண் முன்பு காண்கிறோம் என்று கூறலாம். இத்தகைய படங்களை நீங்கள் பல இடங்களில் பார்த்திருப்பீர்கள். இவற்றின் மூலமாக ரவி வர்மா நம் நாட்டு மக்களின் உள்ளத்தில் எந் நாளும் இடம் பெற்றுவிட்டார்.

புராணப் படங்களைத் தவிர, சில சென்னைக் கவர்னர்களுடைய படங்களையும் மைசூர், உதயபுரி, பரோடா முதலிய சமஸ்தான ராஜாக்களுடைய படங்களையும் ரவி வர்மா எழுதிச் சன்மானங்கள் பெற்றார். இவ்வாறு அரசர்களாலும், பாமர மக்களாலும் ஒருங்கே புகழப் பெற்ற ரவி வர்மா 1906-ம் ஆண்டு பிளவை என்ற நோயினால் பீடிக்கப் பெற்று விண்ணுலகடைந்தார்.

## பயிற்சி

I பொருள் கூறு:—

ஓவியம், சிற்பம், கலை, சைத்திரிகன், கடவுளர், நுட்பம், பதக்கம், புராணம், சன்மானம், ஒருங்கே.

II சொந்த வாக்கியங்களில் உபயோகி:—

சிற்பம், பதக்கம், சன்மானம், ஒருங்கே, கலை.

III விடை கூறு:—

1. ஓவியர்கள் தங்களுடைய படங்களுக்கு விஷயமாகக் கொள்வன யாவை?

2. ரவி வர்மா இளமையில் எங்கெங்கு படம் எழுதினார்?

3. ரவி வர்மாவுக்கு ஓவியக்கலை ஆசிரியரானோர் யாவர்?

4. திருவாங்கூர் அரசருடைய ஆதரவு ரவி வர்மாவுக்கு ஏற்படக் காரணமென்ன ?

5. ரவி வர்மா எப்பொழுது தங்கப் பதக்கம் பரிசு பெற்ருர் ?

6. நம் நாட்டு மக்களின் மனத்தில் ரவி வர்மா இடம் பெற்றமைக்குக் காரணம் என்ன ?

IV இலக்கணம்:—

பின்வரும் வாக்கியங்களில் பேச்சுவழக்கில் உள்ள சில சொற்கள் அமைந்துள்ளன. அவற்றைத் திருத்தி எழுது:

(அ) "நீ போறயா ?" என்று அவன் கேட்டான்.

(ஆ) இந்த வேலே செய்தாச்சு.

(இ) நீ பைத்தியம் பிடிச்ச மனுஷனுயிருக்கே!

(ஈ) அவாளே நான்பார்த்து ரொம்ப காலமாச்சு,

# 7. நீர்வீழ்ச்சிகள்

நீர்வீழ்ச்சி என்பது ஒரு நதியில் பாயும் ஜலம் திடீரென்று செங்குத்தான இறக்கத்தில் விழுவதாகும். மலைப் பிரதேசங்களில் உற்பத்தியாகும் நதிகள் சமவெளியை அடைவதன்முன் சில இடங்களில் நீர்வீழ்ச்சியைப் பெற்றிருக்கக் கூடும். நதி ஜலம் பாய்வதால் பூமி சிறிது சிறிதாக அறுக்கப்படுகிறது. ஏதேனும் ஓரிடத்தில் கெட்டியான பாறையும் அதை அடுத்து மெதுவான பாறையும் இருக்கக்கூடும். இத்தகைய பிரதேசத்தில் நதி ஜலம் பாய்ந்தால் மெதுவான பாறை அதிகமாக அறுக்கப்படும். பல்லாயிரக்கணக்கான வருஷங்கள் இவ்வாறு அறுக்கப்படுவதால் கெட்டியான பாறை முடியுமிடத்தில் ஒரு நீர்வீழ்ச்சி ஏற்படும். சிறு நீர்வீழ்ச்சிகளை அருவி என்பார்கள்.



குற்றால நீர்வீழ்ச்சி

நீர்வீழ்ச்சிகள் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். மக்கள் அருவிகளில் ஸ்நானம் செய்வார்கள். அழகிய நீர்வீழ்ச்சிகளைப் பார்ப்பதற்காகவே பலர் உல்லாசப் பிரயாணம் போவார்கள். நம் நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பிரதேசங்களில் பல நீர்வீழ்ச்சிகளிருக்கின்றன. இவை உள்ள காட்டுப் பிர

தேசங்களின் இயற்கைக்காட்சி மிக ரம்மியமாக இருக்கும். தாமிரபரணி நதியில் உண்டாகும் குற்றால நீர் வீழ்ச்சியைப்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். கோடையில் இந்த அருவியில் ஸ்நானம் செய்யப் பல ஊர்களிலிருந்து ஜனங்கள் போகிறார்கள்.


இயற்கைக் காட்சிகளை அனுபவிப்பதைத் தவிர மற்றொரு முக்கியமான விதத்தில் நீர்வீழ்ச்சிகளை உபயோகிக்கலாம். அதிக உயரத்திலிருக்கும் ஜலம் கீழே விழும்போது அது மிகுந்த சக்தியோடு கூடியிருக்கிறது. ஜலத்தின் சக்தியை உபயோகித்து எந்திரங்களை ஓட்டலாம். தற்காலத்தில் நீர்வீழ்ச்சியின் சக்தியை மின்சார சக்தியாக மாற்றிப் பிறகு, மின்சாரத்தை இஷ்டப்படி உபயோகிக்கும் முறையே பல இடங்களில் கையாளப்படுகிறது. நீர்வீழ்ச்சியினால் மிகவும் மலிவாக மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடுமாகையால் இது இலாபகரமான தொழிலாகும். மின்சாரத்தைக் கம்பிகள் மூலமாக நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள இடங்களுக்குக்கூட அனுப்பி, விளக்கெரிப்பதோ, தொழிற்சாலை எந்திரங்களை ஓட்டுவதோ செய்யலாம். ஆகவே ஒரு நாட்டில் பல நீர்வீழ்ச்சிகள் இருந்தால் அங்கே மின்சார சக்தியும் மலிவாக உற்பத்தி செய்யலாமென்றும் அதனால் தொழிற்சாலைகள் அபிவிருத்தியடைய இடமிருக்கிறது என்றும் நிச்சயிக்கலாம்.

இத்தகைய மின்சார உற்பத்தி ஸ்தாபனம் காவிரி நதியிலுள்ள சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சியில் இருக்கிறது. மைசூர் சமஸ்தானத்தில் பங்களூரையும் மைசூரையும் இணைக்கும் இருப்புப் பாதையில்

மாத்தூர் என்ற ஓர் ஊர் இருக்கிறது. இங்கிருந்து முப்பது மைல் தூரத்தில் சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி உள்ளது. இவ்விடத்தில் காவிரி இரு பிரிவுகளாகிச் சுமார் 200 அடி உயரமிருந்து விழுகிறது. மழை காலத்தில் கால் மைல் அகலமுள்ள ஒரே தாரையாக ஜலம் விழுகிறது. மற்றக் காலங்களில் பல பிரிவு களாகப் பிரிந்து விழும். அருகேயுள்ள மலைகளில் பசுமையான காடுகள் போர்வை விரித்தாற்போல் காணப்படும். இவ் வீழ்ச்சியின் ஜலத்தில் ஒரு பகுதியை உபயோகித்து மின்சாரசக்தி உற்பத்தி செய்கிறார்கள். மின் சக்தியைக் கம்பிகளின் மூலமாக மைசூரின் பல பாகங்களுக்கும் அனுப்புகிறார்கள். நூற்றுக் கணக்கான கிராமங்களும் நகரங்களும் இதன் மூலமாக மின் சாரத்தை உபயோகிக்கின்றன. சிவசமுத்திரத்திலிருந்து 92 மைல் தூரத்திலுள்ள கோலார் தங்கச்சுரங்கங்களுக்கு மின்சாரம் செல்கிறது. இதேபோல் பைக்காரா நீர்வீழ்ச்சியிலிருந்தும் மின்சார உற்பத்தி நடைபெறுகிறது.


சிவ சமுத்திர நீர்வீழ்ச்சி

உலகிலுள்ள மிகப்பெரிய நீர்வீழ்ச்சி தென் ஆப்பிரிக்காவிலுள்ள விக்டோரியா நீர்வீழ்ச்சியேயாகும். இது சாம்பஸி நதி ஜலம் விழுவதால் ஏற்படுவது. இதன் அகலம் 3000 அடி; உயரம் சுமார் 400 அடி. இங்கே ஜலம் விழும் ஓசை இருபது மைல் தூரத்திலுள்ள இடங்களிலும் கேட்குமாம்!



நயாகரா நீர்வீழ்ச்சி

இந்த நீர்வீழ்ச்சியை முதன் முதல் கண்டுபிடித்த ஐரோப்பியர் டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர் ஆவர். வட அமெரிக்காவில் ஈரி, ஒண்டாரியோ என்ற இரண்டு ஏரிகளையும் இணைக்கும் நதியான நயாகராவில் ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது. இதற்கு நயாகரா நீர்வீழ்ச்சி என்று பெயர். இதுவும் உலகப் பிரசித்தி பெற்றதுதான். இதன் உயரம் சுமார் 165 அடி. இங்கே மின்சார உற்பத்தி நடைபெறுகிறது. கனடா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்ற இரு தேசங்களுக்

கும் எல்லையாக இந்த வீழ்ச்சி இருப்பதால் இருநாட்டு அரசாங்கத்தாரும் இதில் மின்சாரம் உற்பத்தி செய்து உபயோகிக்கின்றனர்.

## பயிற்சி

I பொருள் கூறு:—

இறக்கம், செங்குத்தான, அருவி, கண்கொள்ளாக் காட்சி, ரம்மியமாக, அபிவிருத்தி, உற்பத்திஸ்தானம், உலகப்பிரசித்தி.

II பின்வரும் சொற்களை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி:—

கண்கொள்ளாக் காட்சி, அபிவிருத்தி, செங்குத்தான, ரம்மியமாக, பிரசித்தி.

III விடை எழுது:—

1. நீர்வீழ்ச்சி என்றால் என்ன ?
2. நீர்வீழ்ச்சி எப்படி உண்டாகிறது ?
3. நீர்வீழ்ச்சியுள்ள இடங்களுக்கு மக்கள் எதற்காகப் போகிறார்கள் ?
4. நம் நாட்டில் உள்ள பிரபல நீர்வீழ்ச்சிகளில் சில கூறு.
5. மின்சார உற்பத்திக்கு நீர்வீழ்ச்சி எவ்வாறு பயன் படுகிறது ?
6. மின்சார சக்தியை உபயோகிப்பதில் என்ன சௌகரியம் உள்ளது ?
7. சிவசமுத்திர நீர்வீழ்ச்சி எங்குள்ளது ?
8. சிவசமுத்திர நீர்வீழ்ச்சியிலிருந்து கிடைக்கும் மின் சாரம் எங்கெங்கு உபயோகமாகிறது ?
9. உலகிலுள்ள மிகப்பெரிய நீர்வீழ்ச்சி எது ? அதன் உயரம் என்ன?

IV இலக்கணம்:—

1. சொற்களைச் சேர்த்து எழுது:
மெதுவான+பாறை; காடு+பிரதேசம் ! மிக+பெரிய ; பிரிவுகளாக+பிரிந்து.

2. பிரித்தெழுது:

நூற்றுக்கணக்கான; இருபிரிவுகள்; பல்லாயிரம்; உல்லாசப்பிரயாணம்.

3. ஒரு வாக்கியம் முடிந்ததைக் காட்டுவதற்கு அமைக்கப்படும் புள்ளிக்கு முற்றுப் புள்ளி (.) என்று பெயர். வினா வாக்கியத்தைக் காட்டும் குறி, வினாக்குறி (?) எனப்படும். வியப்பு, இரக்கம் முதலிய சில உணர்ச்சிகளைக் காட்ட உபயோகிக்கப்படும் குறி வியப்புக் குறி (!) எனப்படும்.

இந்த மூன்று நிறுத்தக் குறிகளையும் உபயோகிக்கத் தகுந்த இரண்டிரண்டு வாக்கியங்களை எழுது.

---

# 8. சிறுமியர் விளைத்த பெருங் கலகம்

அந்த வருஷத்தில் தீபாவளிப் பண்டிகையின் பொழுது நல்ல மழை பொழிந்துவிட்டது. சிறுவயல் கிராமத்தைச் சுற்றிப் பல ஓடைகளிலும் கால்வாய் களிலும் கரைபுரண்டு நீர் ஓடிக்கொண்டிருந்தது. பள்ளமான இடங்களிலெல்லாம் நீர் தேங்கிச் சிறு சிறு குட்டைகளாகிவிட்டன. கிராமச் சிருர் ஆங் காங்கு விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு குட்டையினருகே இரண்டு சிறுமியர் விளை யாட வந்தார்கள். இருவரும் தீபாவளிப் புத்தாடை களைத் தரித்திருந்தனர். மாலதி நீலப் பாவாடையும் சட்டையும் உடுத்தியிருந்தாள். அகல்யை அழகிய சீட்டித் துணியில் தைத்த நீண்ட அங்கி அணிந் திருந்தாள். இருவரும் மத்தாப்புக் கொளுத்திக் கொண்டே குட்டையருகில் வந்தார்கள். பரஸ்பரம் புது உடுப்புக்களைக் காட்டிக் கொண்டார்கள்.

மாலதிக்கு எட்டு வயதிருக்கும். அகல்யை இரண்டு வயது இளையவள். தீபாவளிப் பண்டிகை யின் பொழுது தத்தம் வீடுகளில் வாங்கிய ஆடை கள், பட்டாசுகள், செய்யப்பட்ட தின்பண்டங்கள் முதலியவற்றைக் குறித்துப் பெருமை பேசியபிறகு, இருவரும் குட்டை நீரில் இறங்கி விளையாட விரும்பி ஞர்கள். முதலில் மாலதி பாவாடையைச் சிறிது உயர்த்திக்கொண்டு கணுக்காலளவு ஆழத்துக்குச் சென்ருள்; அகல்யை அவளைப் பின்பற்றினுள்.

அகல்யை, "மாலதி, எனக்குப் பயமா யிருக்கிறது. ஆழமாயிருக்கும் போலிருக்கிறதே" என்ருள்.

மாலதி, "போடி போ! என்ன பயம்? மழைத் தண்ணீர் கொஞ்சம் தேங்கி யிருக்கிறது. நடுவில் கூட முழங்கால் ஆழமிராது. நான் அக்கரைக்குப் போகிறேன் பார்க்கிருயா? என் பின்னுலேயே, வா," என்று தைரியம் கூறினுள்.

அகல்யை கால்களை தூக்கித் தூக்கி வைத்து நீரை நாலாபக்கங்களிலும் தெறிக்கச் செய்தாள்.

மாலதி, "அகல்யா, இப்படித் தண்ணீரை வாரி இறைக்காதே. என் பாவாடை மேல் விழப்போகிறது," என்ருள்.

அச்சமயத்தில் அகல்யை ஒரு காலைத் தூக்கிப் பலமாகத் தண்ணீரில் வைத்தாள். திடீரென்று கிளம்பிய வண்டல் நீர் மாலதியின் நீலப் பாவாடை யிலும் சட்டையிலும் தாரையாக விழுந்து அவற்றை நனைத்துவிட்டது. மாலதி கடுங்கோபமுற்று அகல் யையைத் திட்டிக்கொண்டு அடிக்கவந்தாள். அகல்யை பயந்து தன் வீட்டை நோக்கி ஓடினுள்.

மாலதியின் தாய் அப்பொழுதுதான் குடிசையி லிருந்து வெளியே வந்து தன் பெண்ணின் அலங் கோலத்தைக் கண்டாள். புதுப் பாவாடை அழுக்கு நீரால் நனைந்திருப்பதைப் பார்த்ததும் கோபமுற்ற அவள், "ஏண்டி, பாவாடையை அழுக்காக்கி விட்டாய்?" என்று கேட்டாள்.

மாலதி, "நானில்லையம்மா. அகல்யை வேண்டு மென்றே இப்படிச் செய்து விட்டாள்," என்று அழுதாள்.

மாலதியின் தாய் ஆத்திரமடைந்து அகல்யை பின்னே ஓடி அவளைப் பிடித்து முதலில் இரண்டடி வைத்தாள். அச்சிறுமியின் கூக்குரல் கிராமம் முழுதும் கேட்டது. ஆங்காங்கு குடிசைகளிலிருந்து பலர் வெளியே வந்தார்கள்.

அகல்யையின் தாய் தன் பெண்ணை அடித்தவளிடம் சென்று, "என் பெண்ணை அடிக்க உனக்கென்ன உரிமை இருக்கிறது? அதுவும் இப்படியா முதுகு சிவக்க அடிக்கிறது? உன் கையை முறித்தால் என்ன?" என்று கேட்டாள்.

மாலதியின் தாய் பதிலுக்குக் கூச்சல் போட்டாள். இரண்டு தாயாரும் ஒருவரை யொருவர் மனமாரத் திட்டிக்கொண்டனர். இந்த வேடிக்கையைப்பார்க்க ஊர் திரண்டுவிட்டது. சிறிது நேரத்தில் மாலதியின் தாய் சார்பில் சிலரும் அகல்யையின் தாய் பக்கம் சிலரும் கட்சி சேர்ந்து கூச்சல் போட்டார்கள். ஒருவர் பேசுவதை மற்றொருவர் கேட்காமல் எல்லோரும் ஒரேசமயத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். பெரியவர்களுக்குள் வாய்ச் சண்டை முற்றியதும் அடிதடியும் தொடங்கி விட்டது.

இத்தருணத்தில், அந்தக் கிராமத்திலேயே வயது முதிர்ந்த் பாட்டி யொருத்தி, கோலூன்றிக்கொண்டு அங்கு வந்தாள். அவள், "நன்றாயிருக்கிறது உங்கள் சண்டை! அதுவும் தீபாவளியன்று சண்டை போட நாள் பார்த்தீர்களா?" என்று சொல்லி, சண்டை போடுகிறவர்களைச் சமாதானம் செய்ய முயன்றாள். ஆனால் சச்சரவு நிற்கவில்லை. பாட்டியை அலட்சியம்

செய்துவிட்டு அவர்கள் கூச்சல் போட்டவண்ண மிருந்தார்கள்.

மாலதியையும் அகல்யையும் இப்பொழுது யாரும் கவனிக்கவில்லை. அச் சிறுமிகள் மறுபடியும் அந்தக் குட்டைக்குச் சென்றுவிட்டார்கள். மாலதி கூர்மையான ஒரு கல்லை எடுத்து, ஒரு சிறு வாய்க் கால் தோண்டினுள்; குட்டைநீர் வாய்க்காலில் ஓடும் படி அகல்யை நீரை இறைத்துவிட்டாள். சிறுமியர் தம் சண்டையை மறந்து, வாய்க்காலில் நீர் ஓடு வதைப் பார்த்து மகிழ்ந்தனர். வாய்க்காலைச் சிறிது சிறிதாக நீட்டிக்கொண்டு பெரியவர்கள் சண்டை யிடும் இடத்திற்கே வந்து விட்டார்கள்.

"அகல்யா, அந்தக் குச்சி தண்ணீரில் எப்படி ஓடுகிறது பார்! அதைப் பிடி," என்று கூறிக் குதித் தாள் மாலதி. அகல்யை சிரித்துக்கொண்டே நீரோட்டத்தில் மிதந்து சென்ற குச்சியைப் பிடிக்க ஓடினுள்.

பாட்டி இச்சிறுமிகளைப் பார்த்ததும் மற்ருெரு முறை சமாதான முயற்சியில் இறங்கினுள். "உங் களுக்கு இப்படிச் சண்டை போடுவது வெட்கமாக இல்லையா? இதோ பாருங்கள். இந்தச் சிறுமிகளுக் காக நீங்கள் ஒருவரையொருவர் கோபித்துத் திட்டி அடித்துக்கொள்கிறீர்கள். இவர்களோ தங்கள் சண் டையை அப்பொழுதே மறந்துவிட்டு மகிழ்ச்சியோடு விளையாடுகிருர்கள்," என்று சுட்டிக் காட்டினுள் அம்முதாட்டி.

சண்டையில் ஈடுபட்டிருந்தவர்கள் சிறிது ஓய்ந்து, அச் சிறுமிகளைப் பார்த்தார்கள். தமது சச்சரவு பய

னற்றது என்றறிந்தவுடன் அவர்கள் நாணமடைந்தனர்; தங்களுடைய மடமைக்காக நகைத்துக் கொண்டே தத்தம் வீட்டை நோக்கி நடந்தனர்.

## பயிற்சி

I பொருள் கூறு:—

பண்டிகை, பொழி, கரைபுரண்டு, சிருர், புத்தாடை, அங்கி, பரஸ்பரம், உடுப்பு, அக்கரை, கடுங்கோபமுற்று, அலங்கோலம், வேண்டுமென்றே, ஆத்திரம், கூக்குரல், சார்பு, மூதாட்டி.

II சொந்த வாக்கியங்களில் உபயோகி:—

கரைபுரண்டு, சிருர், பரஸ்பரம், அலங்கோலம், சார்பு.

III விடை கூறு:—

1. மழை பொழிந்தபின் சிறுவயல் கிராமம் எவ்வாறு காட்சி அளித்தது ?

2. மாலதியும் அகல்யையும் தீபாவளியைப் பற்றி என்ன பேசிக்கொண்டார்கள் ?

3. மாலதியின் உடை ஏன் அழுக்கு நீரால் நனைந்தது ?

4. மாலதியின் தாய் அகல்யையை ஏன் அடித்தாள் ?

5. பெரியோர் சண்டை எவ்வாறு முற்றியது ?

6. கிழவியின் சமாதான முயற்சி முதலில் என்ன ஆயிற்று ?

7. சிறுமியர் தம் சண்டையினை மறந்தபின் என்ன செய்தார்கள் ?

8. கிழவியினுல் பெரியவர்களை எப்படிச் சமாதானப் படுத்த முடிந்தது ?

IV இலக்கணம்:—

1. முற்றுப்புள்ளி, வினுக்குறி, வியப்புக்குறி ஆகிய மூன்றினையும் ஏற்ற இடங்களில் அமைத்து எழுது:—

நான் நேற்று என் ஆசிரியரைக் கண்டேன் அவர் என்னிடம் "நீ நாளை வருவாயா" என்று கேட்டார் நான் வர மறுத்தேன் அவர் "உனக்கு எத்துணை கர்வம்" என்று கூறினுர்

2. சொற்களைச் சேர்த்து எழுது:
நீலம் + சட்டை; எனக்கு + பயம்;
கால்களை + தூக்கி; புதுமை + பெண்.

3. சொற்களைப் பிரித்தெழுது:
புத்தாடை; மனமார; பயனற்றது; நாணமடைந்தனர்.

4. கேட்டபடி மாற்றி எழுது:

(அ) அகல்யை சிரித்துக்கொண்டே நீரோட்டத்தில் மிதந்து சென்ற குச்சியைப் பிடிக்க ஓடினாள். (மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரி.)

(ஆ) இருவரும் தீபாவளிப் புத்தாடைகளை அணிந்தார்கள். (செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்று.)

---

# செய்யுட் பகுதி

## I வாழ்த்து

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யாரவர்
தலைவர்; அன்னவர்க் கேசரண் நாங்களே. (1)
—கம்பர்

சீரிய உலகம் மூன்றும் செய்தளித்து அழிப்பவல்லாய்!
நேரிய எதிர் ஒப்பின்றி நீத்தவோர் கடவுள் தூய
வேரிய கமல பாதம் வினையறப் பணிந்து போற்றி
ஆரிய வளன் தன் காதை அறமுதல் விளங்கச்
[சொல்வாம் (2)
—வீரமா முனிவர்

### குறிப்புரை

1. உள ஆக்கல்-சிருஷ்டித்தல். நிலை பெறுத்தல்-காப்பாற்றுதல். நீக்கல்-அழித்தல். நீங்கலா-நீங்காத. அலகு இலா-எல்லையில்லாத.

2. செய்து-சிருட்டித்து. அளித்து-காத்து. நீத்த ஓர் கடவுள்-(எல்லாவற்றையும்) கடந்து நிற்கும் கடவுள். வேரிய-நறுமணமுள்ள. ஆரிய வளன்-ஏசுநாதரது தந்தையான சூசையப்பர்.

## II கதை

### (பஞ்சதந்திரப் பாடல்)

கோடுறு சினையிற் காகம்
கூடுவைத் தநேக காலம்
பேடொடு கூடி வாழும்
பெருமரப் பொந்தில் வந்தே

ஆடிய கரும்பாம் பொன்றங்(கு)
அதுபெறு முட்டை யெல்லாம்
நாடியே குடித்துப் போட
நலிந்துளம் மெலிந்து வாடி. (1)
தன்னுயிர்ப் பாங்கனை
சம்புகன் அருகு போய், "இங்(கு)
என்னசெய் குவன்நான்?" என்ன,
"இதைக்கொலல் அரிதோ? நீ போய்
மன்னவன் தேவி யாடும்
மஞ்சனச் சாலை புக்குப்
பொன்னணி கொண்டு வந்து
போடுக பொந்தில்" என்ன. (2)
காகம் அப்படியே செய்யக்
காவலன் ஏவ லாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை
ஈர்த்தனர்; ஈரும் போதில்
நாகமங் கிருந்து சீற,
நறுக்கினர் இருதுண் டாக. (3)

—வீரமார்த்தாண்ட தேவர்

## குறிப்புரை

1. கோடு உறு சினை-கொம்பினுடன் இணைந்துள்ள கிளை. பேடு-பெட்டை. நாடி-ஆராய்ந்து தேடி. நலிந்து-வருந்தி.

2. பாங்கன்-நண்பன். சம்புகன்-நரி. ஆடும்-நீராடும். மஞ்சனச் சாலை-நீராட்ட அறை.

3. ஏகி-சென்று. ஈர்த்தனர்-இடித்தனர். மாமரம்-பெரிய மரம்.

# III நீதி

## 1. இனியவை நாற்பது

மானம் அழிந்தபின் வாழாமை முன்இனிதே;
தானம் அழியாமைத் தானடங்கி வாழ்வினிதே;
ஊனமொன் றின்றி உயர்ந்த பொருளுடைமை
மானிடவர்க் கெல்லாம் இனிது. (1)

வருவாய் அறிந்து வழங்கல் இனிதே
ஒருவர்பங் காகாத ஊக்கம் இனிதே;
பெருவகைத் தாயினும் பெட்டவை செய்யார்
திரிபின்றி வாழ்தல் இனிது. (2)

—பூதஞ்சேந்தனுர்

## 2. இன்னு நாற்பது

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னு;
நாற்றம் இலாத மலரின் அழகின்னு;
தேற்றம் இலாதான் துணிவின்னு; ஆங்கின்னு
மாற்றம் அறியான் உரை. (3)

தன்னைத்தான் போற்ரு தொழுகுதல் நன்கின்னு;
முன்னை உரையார் புறமொழிக் கூற்றின்னு;
நன்மை இலாளர் தொடர்பின்னு; ஆங்கின்னு
தொன்மை உடையார் கெடல். (4)

—கபிலர்

## 3. சதகச் செய்யுள்

நேற்றுள்ளர் இன்றிருக்கை நிச்சயமோ?
ஆதலால், நினைத்த போதே
ஊற்றுள்ள பொருளதனை அறிந்துதேடி
வைப்பதறி வுடைமை யன்ருே?

கூற்றுள்ளம் மலையவரும் தண்டலையாரே !
சொன்னேன், குடபால் வீசும்
காற்றுள்ளபோ(து) எவரும் தூற்றிக்கொள் (5)
வதுநல்ல கருமம் தானே.

—தண்டலையார் சதகம்

வாலிபம் தனில்வித்தை கற்கவேண் டும்; கற்ற
வழியிலே நிற்க வேண்டும் ;
வளைகடல் திரிந்து பொருள் தேடவேண்டும்; தேடி
வளரறம் செய்ய வேண்டும்;
சீலமுடையோர்களைச் சேரவேண்டும்; பிரிதல்
செய்யா திருக்கவேண்டும்;
செந்தமிழ்ப்பாடல் பல கொள்ளவேண் டும்; கொண்டு
த்யாகம் கொடுக்க வேண்டும்;
ஞாலமிசை பல தருமம் நாட்டவேண்டும்; நாட்டி
நன்ருய் நடத்த வேண்டும்;
நம்பன் இணை யடிபூசை பண்ணவேண் டும்; பண்ணி
ஞலுமிகு பத்தி வேண்டும்;
ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே !
யனக ! வெம(து) அருமை மதவேள்
அனுதினமும் மனதில் நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதே வனே ! (6)

—அறப்பளீசுர சதகம்

சிங்கார வனமதில் உதிப்பினும் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாகுமோ ?
திரையெறியும் வாவியில் பூத்தாலுமே கொட்டி
செங்கஞ்ச மலராகுமோ ?
அங்கா னகத்தில் பிறந்தாலும் முயலான(து)
ஆனையின் கன்ருகுமோ ?

ஆண்மையா கியநல்ல குடியில் பிறந்தாலும்
அசடர்பெரி யோராவரோ ?
சங்காடு பாற்கடல் பிறந்தாலும் நத்தைதான்
சாளக்கி ராமமாமோ ?
தடமேவு கடல்நீரிலே உப்பு விளையினும்
சாரசர்க் கரையாகுமோ ?
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குப்தேசம்
வைத்தமெய்ஞ் ஞானகுருவே !
மயிலேறி விளையாடு குகனே ! புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே ! (7)

—குமரேச சதகம்

## குறிப்புரை

1. இனியவை நாற்பது

1. தானம்-நிலை. ஊனம்-குறை.

2. வருவாய்-வருமானம். வழங்கல்-கொடுத்தல். ஒருவர் பங்கு ஆகாத-ஒருவருடைய சார்பினுல் ஏற்படாத, (சுயமாகவே ஏற்பட்டுள்ள) பெட்டவை-விரும்பியவை. திரிபு-மாறுபாடு.

2. இன்ஞ நாற்பது

3. ஆற்றல்-திறமை. நாற்றம்-நறுமணம். தேற்றம்-தெளிவு. மாற்றம்-சொல்.

4. புறமொழி-புறங்கூறல். தொடர்பு-நட்பு. தொன்மை உடையார்-பழம் பெருமை உடையவர்.

3. சதகச் செய்யுள்

5. ஊற்றுள்ள-ஆதாரமான. கூற்று-எமன். மலைய-தாக்க. குடபால்-மேற்குப் பக்கமாக.

6. வளைகடல்-பூமியை வளைந்துள்ள கடல். சீலம்- நற்குணம். ஞாலம்-பூமி. நம்பன்-சிவபெருமான். ஆல் அமர் கண்டன்-விஷம் தங்கும் கழுத்தையுடைய சிவபெருமான். பூதி-திருநீறு. முண்டன்-உடலையுடையவன். அனக-குற்றமற்றவனே. நினைதரு-நினைக்கும்.

7. தீஞ்சொல்-இனிய சொல். திரை-அலே. வாவி-குளம். கொட்டி-ஒரு நீர்ப்பூண்டு. கஞ்சமலர்-தாமரைப்பூ. சாளக் கிராமம்-பூசைக்குரிய ஒரு கல். சார-உருசியான. தடமேவு-விசாலமான. குறுமுனி-அகத்தியர். புல்வயல்-ஓர் தலம்.

## IV பிறவகை

[ஈயேற உலகம் குலுங்கியது என்று பாடியது]

வாரணங்கள் எட்டும் மகமேரு வும்கடலும்
தாரணியும் எல்லாம் சலித்தனவால்—நாரணனைப்
பண்வாய் இடைச்சி பருமத்தி னல்அடித்த
புண்வாயில் ஈமொய்த்த போது. (1)

—காளமேகப் புலவர்

[மாலைக் காலம்]

முல்லை மலர்ந்து மகிழ்ந்ததடி—ஆம்பல்
மூடிய வாயும் திறந்ததடி
எல்லையிலாமலர்ச் சோலையிலே—வண்டும்
இன்னிசை பாடித் திரிந்ததடி (2)
தாயும் இரங்கி வருகுதடி—கன்றும்
தாவிக் குதித்தோடிச் செல்லுதடி
ஆயும் பொழிலில் பறவை யெல்லாம்—அந்தி
அங்காடிபோல ஒலிக்குதடி. (3)

—தேசிக விநாயகம் பிள்ளை

[தமிழ் நாடு]

வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர்வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. (4)

—ஔவையார்

## [நாட்டு வளம்]

பாய்ந்த தெங்கதின் பழங்கள் வீழ்தலால்
வாய்ந்த வாழைமா வருக்கை ஆசினி
சாய்ந்த தீங்கனி சரிந்த தேம்புனல்
தோய்ந்த வாயெலாம் இனிமை தோய்ந்தன. (5)

—வீரமா முனிவர்

## குறிப்புரை

1. வாரணம்-யானை. தாரணி-பூமி. பண்-இசை.

2. ஆம்பல்-குவளை மலர்.

3. தாய்-தாய்ப்பசு. அந்திஅங்காடி-மாலைக்காலக் கடைத் தெரு.

4. வேழம் - யானை. மேதக்க - மேன்மை பொருந்திய. பூழியர் கோன்-பாண்டிய மன்னன். தென்னாடு-பாண்டியநாடு. தெண்ணீர்-தெளித்த நீர். சான்றோர்-அறிவு ஒழுக்கங்களால் மேன்மையுற்றவர்.

5. தெங்கு-தென்னை. தெங்கின் பழம்-தேங்காய். வருக்கை-ஒரு வகைப் பலா. ஆசினி-மற்றொரு வகைப்பலா. தீங்கனி-இனிய பழங்கள். தோய்ந்தவாய் எலாம்-பாய்ந்த இடம் எல்லாம்.

Used 24 lbs. Double Crown White Printing

# ASOKA VACHAKAM

BOOK I — FORM I

PART II — SPECIAL STUDY

*BY*

Vidwan S. MUTHU AYYANGAR, B.A. (Hons.), L.T.
*Asst., Sir M. Ct. Muthiah Chettiar High School, Purasawalkam, Madras*

V. S. SWAMINATHAN
EDUCATIONAL PUBLISHER

14, West Tower Street, MADURAI | 15, Sunkurama Chetty St., MADRAS-1

Rights Reserved]

[Price Re. 0—10—0 or 62 nP.